www.padippakam.com

பெண்ணடிமை தீராமல் மண்ணடிமை தீராது

# பெண் உரிமை

ஜன–அக்–2000



த.பெ.க. மாநாட்டு ஊர்வலத்தில்
தீக்கிரையாக்கப்பட்ட காவல்துறையின் படச்சுருள்

படிப்பகம்

www.padippakam.com

# பெண் உரிமை

7 - 2, 3, 4, 5, 6

ஜனவரி - அக்டோபர் - 2000

தனி சுற்றுக்கு மட்டும்

நன்கொடை

ரூ. 4.00

ஆண்டு சந்தா

ரூ. 30.00

தொடர்புக்கு.....

அஜிதா

17/34, இராணி அண்ணா நகர்,
கே.கே. நகர்,
சென்னை - 600 078

உள்ளே. . .


| உள்ளே. . . | பக்கம் |
|---|---|
| ☞ பெண் உரிமைக்காக. . . | 3 |
| ☞ த.பெ.க.வின் இரண்டாவது மாநில மாநாடு. . . | 6 |
| ☞ மரண அடி. . . | 10 |
| ☞ சதிக்கு சிதை வளர்ப்போம். . . | 11 |
| ☞ சிறை. . . | 14 |
| ☞ பெண்கள் 2000. . . | 15 |
| ☞ ஆகாயத்தில் பறக்கும் விலைவாசி. . . | 16 |
| ☞ சீனப்புரட்சியில் பெண்கள் பங்கு. . . | 17 |
| ☞ செய்தித் துளிகள். . . | 23 |
| ☞ எதிரொலிப்பு. . . | 28 |
| ☞ பாகிஸ்தான் பெண்களைக் கொல்லும் குடும்ப கௌரவம். . | 29 |
| ☞ பொன்னகரம். . . | 32 |
| ☞ பெண்ணின் அகோரம். . . | 34 |
| ☞ குடியைக் கெடுக்கும் குடியை ஒழித்திடுவோம். . . | 36 |


படிப்பகம்

www.padippakam.com

# பெண் உரிமைக்காக...

**அன்பார்ந்த நண்பர்களே!**

சமீபத்தில் தினசரிகளில் வங்கியில் 84,000 ஊழியர்கள் தன்னார்வ ஓய்வு (Voluntary Retirement) என்ற பெயரில் வேலையிலிருந்து நீக்கப்பட உள்ளனர் என்ற செய்தியை பார்த்தவுடன் அதிர்ச்சியில் ஆழ்ந்தனர் பலர். அரசின் தொழிலாள விரோதப் போக்கைப் பற்றி பேசிக் கொண்டிருக்கையில், பாரத் கன மின் நிறுவனம் இம்மாதிரியே தொழிலாளர்களை வெளித்தள்ளப்போகிறதாம் என்ற செய்தி மேலும் அதிர்ச்சியூட்டியது. அடுத்த சில நாட்களில், என்ன எதிர்ப்புகள் கிளம்பினாலும் அக்டோபர் ஒன்றாம் தேதி முதல் தொலைபேசித் துறை தனியார் மயமாக்கப்படும் என்று தொலை தொடர்பு அமைச்சர் ராம் விலாஸ் பஸ்வான் வீரவேசத்துடன் தெரிவித்ததை பத்திரிக்கைகள் விவரித்தன.

இப்படி, பொதுத்துறை தனியார்மயமாக்கலைப் பற்றி செய்திகள் வந்து கொண்டிருக்கையில், உயர்கல்விக்கான மானியத்தை 1000 கோடியிலிருந்து 680 கோடியாக அரசு குறைத்ததனால், கல்லூரிக் கட்டணம் மலையேறிப் போனதை எதிர்த்து மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்ததாக வானொலி ஒலிபரப்பியது.

இதுமட்டுமல்லாமல், ஏகாதிபத்தியத்தின் கைபொம்மையான இந்திய அரசு, வெளிநாட்டவருக்கு இந்தியப் பொருளாதாரத்தை திறந்துவிட்டதனால் வெளிநாட்டுக் கம்பெனிகள் அதிகமாக வங்கிகளில் டாலரை வாங்கியதன் விளைவு – இந்திய பணத்தின் மதிப்பு தினமும் சரிகின்றது. ஒரு டாலர் 45.35 வரை சரியத் தொடங்கியது. உடனே, டாலரை வங்கிகள் வாங்கக்கூடாது என்று ரிசர்வ் வங்கி கூக்குரலிட்டதையும் தினசரிகள் விவரித்தன.

இதுமட்டுமல்லாமல், சமீபத்தில் அரிசி, மண்ணெண்ணெய்,சமையல் எரிவாயுவின் விலையை ஏற்றி மக்கள் வயிற்றிலடித்துள்ளது இந்திய ஆளும் கும்பல்! மற்றொரு புறம், கடன் அட்டையில் (Credit Card) பொருட்களை கடனில் வாங்கிக் கொள்ளலாம் என்று கூறி நடுத்தர மக்களை மீளாக் கடனில் சிக்கித் தவிக்க வைக்கின்றது.

தனியார்மயம், மேல்தட்டு வர்க்கம் மட்டும் படிக்கும் கல்வி, பணமதிப்பு குறைவு, விலைவாசி உயர்வு என்று கொடுமைகள் அதிகரித்த வண்ணமாக இருக்கிறது. ஏனிந்தக் கொடுமைகள்?

ஐம்பதாண்டு கால போலி சுதந்திர ஆட்சியில், இந்திய ஆளும் கூட்டம் ஏகாதிபத்திய, நிலவுடமை சுரண்டலைப் பாதுகாத்து வருகின்றது. ஒரு புறம் சுயத் தொழில்களை வளர்க்காமல் ஏகாதிபத்தியங்களின் தொழில்நுட்பம், மூலதனம், உதவி, கடன் ஆகியவற்றை சார்ந்தே தொழில் வளர்ச்சி நடைபெற்றது. இதன் விளைவாக



படிப்பகம்

www.padippakam.com

ஆண்டுதோறும் பல்லாயிரம் கோடி ரூபாய்கள் பன்னாட்டு முதலாளிகளால் கொள்ளையிடப்பட்டன. நாடு தனது இருப்புக்கே அந்நியர்களை சார்ந்து நிற்க வேண்டியானது.

மறுபுறம், பெரும்பான்மை விவசாயிகளை அப்பட்டமான வறுமையில் வைத்திருக்கும் அரை – நிலவுடமை சமூக அமைப்பால், மக்களின் வாங்கும் சக்தி இல்லாததால், தொழில் துறைக்கான சந்தை தேக்கமடைந்தது. தொழிலுக்கான மூலதனமும் திரட்டப்படமுடியவில்லை.

இத்தகைய, நிலவுடமை ஏகாதிபத்தியச் சுரண்டலின் விளைவாக, அந்நியக் கடனையே சார்ந்து நின்றதால், கடனுக்கு வட்டி கட்ட கடன், வட்டிக்கு வட்டி கட்ட கடன் என நாட்டின் பொருளாதாரம் கடன் வலையில் வீழ்ந்தது.

இக்கடன் சிக்கலை தீர்க்க 80–களில் ஐ.எம்.எப்., உலக வங்கி போன்ற ஏகாதிபத்திய வட்டிக்காரர்களிடம் இந்திய ஆளும் வர்க்கங்கள் சரணடைந்தனர்.

ஏகாதிபத்தியங்களோ கடன் தர வேண்டுமெனில், நாட்டை தாம் தங்கு தடையின்றி சுரண்டவும், அனைத்துத் தடைகளையும் மக்கள் மீது சுமத்தவும் புதிய பொருளியல் கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என கட்டளையிட்டனர். இக்கேவலமான கொள்கை 1991 முதல் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அனைத்து ஓட்டுக் கட்சிகளும் விதி விலக்கின்றி இம்மக்கள் விரோதக் கொள்கையை தீவிரமாக திணித்து வருகின்றனர்.

*மறுசீரமைப்பு திட்டத்தினால் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டு 7 கோடியாக உயர்ந்துள்ளது!*

மக்கள்விரோதக் கொள்கை துரிதப்படுத்த ஆரம்பித்ததன் விளைவுதான் இன்று வங்கிகளில் 84,000 தொழிலாளர்களுக்கு வேலை பறிப்பு. .. அரிசி, மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு விலையேற்றம். . . உயர் கல்விக்கான மானிய குறைப்பு. . . ரூபாய் மதிப்பு குறைப்பு. . .

இந்தக் கொடுமைகள் இத்துடன் நிற்கப் போவதில்லை. இன்னும் சில நாட்களில் ஒரு வேளை கஞ்சிக்குக் கூட வழியில்லாமல் பசி, பட்டினியில் – சோமாலியாவில், மெக்ஸிகோவில் மக்கள் இறந்தது போல் இந்திய மக்கள் சவக்குழியில் தள்ளப்படுவதற்கான ஆயத்தங்கள் நடந்து வருகின்றன.

ஆனால், கூர்மையடைந்து வரும் இந்த சமூக – பொருளாதார – பண்பாட்டு முரண்பாடுகளை எதிர்த்து மக்கள் போராட்டங்கள் வெடித்துக் கொண்டு தானிருக்கின்றன. பொதுத்துறை தனியார்மயமாக்களை எதிர்த்தும், தங்க கைக்குலுக்கல் போன்ற தொழிலாள விரோதப் போக்கை எதிர்த்து வங்கி, இன்சூரன்ஸ்,



படிப்பகம்

www.padippakam.com

தொலைபேசி, மின்சார வாரியம் மற்றும் தபால் தொழிலாளர்களின் போராட்டக்குரல்கள் எழுந்த வண்ணமாக உள்ளது. மேலும் சம்பள உயர்வுக்காகவும், சட்டவிரோத கதவடைப்பை எதிர்த்தும் டன்லப், பின்னி போன்ற தனியார் துறைகளிலும் தொழிலாளர்கள் போராடுகின்றனர். உலக வங்கியின் நிபந்தனைப்படி நர்மதா, சர்தார் சரோவா போன்ற பெரிய அணைக்கட்டுகளை இந்திய அரசுக் கட்டுவதால், சுற்றுபுற அசுத்தமும், மலை வாழ் மக்கள் புறந்தள்ளப்படுவதால் மலைவாழ் மக்களும் போராடுகின்றனர்.

**தனியார் மயமாக்கலால் எல்.ஐ.சியில் 40% பெண்கள் வேலையிழக்கப் போகின்றனர்**

புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்த்து கொழுந்துவிட்டு எரியும் மக்கள் போராட்டங்களை இந்திய ஆளும் கும்பல், இரும்புக்கரங்களால் ஒடுக்கி வருகின்றது. தடியடி பிரயோகிப்பது, துப்பாக்கி சூடு நடத்துவது, கைது செய்வது, கொந்தளிக்கும் விவசாயிகளை, தொழிலாளர்களைக் கொல்வது என்பதெல்லாம் அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டது.

அடக்கு முறைகளால் போராட்டங்களை ஒடுக்க முடியாது; மாறாக, அடக்குமுறைகள் அதிகமாவதால் போராட்டங்கள் கொழுந்து விட்டு எரியும் என்ற உண்மையை ஆளும் வர்க்கம் மறுக்கின்றது.

தரகு முதலாளிகளும், நிலப்பிரபு வர்க்கமும் கூடி குலாவி நாட்டை நவகாலனியாக்கும் இந்த புதிய பொருளாதாரக் கொள்கை ஒடுக்கப்படும் மக்களுக்கானதல்ல! இந்த மக்கள் விரோதக் கொள்கையால் மக்களின் துயரை துடைக்க முடியாது. 'உழுபவனுக்கே நிலம்' என்ற இலட்சியத்தை முன்னிறுத்தி புதிய ஜனநாயகப் புரட்சியை வென்றெடுப்பதால் மட்டுமே மக்களுக்கான கொள்கைகளை வரையறுக்க முடியும்.

இன்றைய சூழலில் மக்களின் வாழும் உரிமைக்காக இந்த மக்கள் விரோத புதிய பொருளாதாரக் கொள்கைகளை எதிர்த்து அணிதிரள வேண்டியது உழைக்கும் மக்களின் – பெண்களின் கடமையாகும். அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு, ரேசன் விலை உயர்வு, கட்டண ஏற்றங்கள், கல்வி கட்டண உயர்வு, பொ. துத்துறை தனியார் மயமாக்கம், சிறு தொழில் நசிவு, ஆலைமூடல், ஆட்குறைப்பு இன்னும் இது போன்ற பல்வேறு தாக்குதல்களை எதிர்த்துப் போரிட வேண்டிய தேவை இன்று நம் முன் உள்ளது. புதிய பொருளியல் கொள்கையை எதிர்த்த போராட்டங்களிலும் மக்கள் இயக்கங்களிலும் செயலூக்கத்துடன் பங்கேற்க வேண்டுமென தமிழகப் பெண்களை 'பெண் உரிமை' அறைகூவி அழைக்கின்றது.

**– ஆசிரியர் குழு**



படிப்பகம்

www.padippakam.com

# த.பெ.க.வின் இரண்டாவது மாநில மாநாடு

பெண்ணடிமை சங்கிலியை உடைத்தெறிந்து, ஆண் – பெண் சமத்துவம் படைத்திட கடந்த எட்டுவருடங்களாக, தமிழகத்தில் போர் முரசுக் கொட்டிவரும் த.பெ.க.வின் இரண்டாவது மாநில மாநாடு, 24.6.2000 அன்று சென்னை கோடம்பாக்கத்தில், பி.டி.எஸ். திருமண மண்டபத்தில் நடைபெற்றது. ஏறத்தாழ 100 பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

த.பெ.க.வின் கொடியேற்றத்துடன் காலை 10.30 மணிக்கு மாநாடு ஆரம்பித்தது. பெண் விடுதலைக்காக உயிர் நீத்த தியாகிகள் நினைவுப் பாடலுடன் மாநாடு தொடங்கியது. மாநாட்டிற்கு அஜிதா தலைமை தாங்கினார். ஆந்திர பிரதேச சைதன்ய மகிளா சமக்கியாவின் தோழமை பிரதிநிதியான விஜயா வாழ்த்துரை வழங்கினார். கர்நாடகத்தை சார்ந்த மஹிளா ஜாகிருதியின் கௌரி வாழ்த்துரை நல்கினார். தமிழ் தேசிய பொதுவுடமை மகளிர் எழுச்சி அமைப்பை சார்ந்த தேன்மொழி மாநாட்டிற்கு வாழ்த்துரை வழங்கின்ார்.

'பெண்ணியம்', 'பெண்ணியம் – அணுகு முறைகள்' 'கற்பு கலாச்சாரம்' போன்ற நூல்களை எழுதியுள்ள பேராசிரியர் பிரேமா மாநாட்டில் சிறப்புரை ஆற்றினார். குடும்பம் என்ற நான்கு சுவர்கள் பெண்கள் மீது தொடுத்து வரும் ஒடுக்குமுறைகளைப் பற்றியும், மேலைநாட்டு கலாச்சாரத்தின் பாதிப்புகளைப் பற்றியும் விளக்கமாக பேசினார்.




ஏற்கனவே, உறுப்பினர்களிடமிருந்து வந்த த.பெ.க. கொள்கை அறிக்கையின் திருத்தங்களைப் படித்துவிட்டு, அதன் உள்ளடக்கத்தை அஜிதா விளக்கினார். மாநாடு ஒருமனதாக கொள்கை அறிக்கையை ஏற்றுக் கொண்டது. முதல் மாநில மாநாட்டிற்கு பின், நடந்த த.பெ.க. போராட்டங்களை ரீனா விவரித்தார்.

ஐந்து பேர் கொண்ட மாநிலக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. மாநிலக் குழு தலைவராக அஜிதா அறிவிக்கப்பட்டார். மாநிலக் குழு உறுதிமொழியுடன், பதினோரு தீர்மானங்கள் நிறைவேற்றத்துடன் மாநாடு நிறைவு பெற்றது.



படிப்பகம்

www.padippakam.com

## மாநாட்டு ஊர்வலம் :

மாலை 4.30 மணிக்கு மாநாட்டு ஊர்வலம் எழுச்சிமிகு முழக்கங்களுடன் ஜெனியாவின் தலைமையில் பி.டி.எஸ். திருமண மண்டபத்தில் ஆரம்பித்தது. லிபர்டி பஸ் நிலையம் அருகே ஊர்வலம் சென்று கொண்டிருக்கையில் க்யு பிரிவு போலீஸ் ஊர்வலத்தை வீடியோ எடுக்க முயன்றது. ஊர்வலத்தை சட்ட விரோதமாக வீடியோ எடுக்க உரிமையில்லை என்று முதலில் எச்சரிக்கப்பட்டது. ஆனால், அதையும் மீறி மாடியிலுள்ள கடைகளிலிருந்து திருட்டுத்தனமாக வீடியோ எடுக்க முயன்றார். உடனே, 'திருட்டுத்தனமாக எங்களை வீடியோ எடுக்க அனுமதிக்கமாட்டோம் ; கள்ளத்தனமாக எடுத்த வீடியோ கேசட்டை எங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்' என்று சீருடையில் வந்த இன்ஸ்பெக்டரிடம் தெரிவிக்கப்பட்டது. ஆனால், வீடியோ கேசட்டை எடுத்த க்யூ பிரிவு போலீஸ் வீடியோ எடுக்க பாதுகாப்பு கொடுத்தனர். பதுங்க வைக்கவும், தப்பி ஓட வைக்கவும் முயற்சித்தனர்.

ஆனால், எழுச்சி மிகு முழக்கங்களுடன், ஊர்வலத்தில் வந்த பெண்களில் ஒரு பிரிவினர், வீடியோ கேசட்டை ஒப்படைக்கும் வரை, இந்த இடத்தை விட்டு செல்ல மாட்டோம் என்று முழக்கங்களுடன் கிட்டதட்ட பத்து நிமிடத்திற்கு அங்கேயே நின்று விட்டனர். மற்றொரு பிரிவினர், திருட்டு வீடியோ எடுத்த க்யூ பிரிவு போலீஸை துரத்திப்பிடித்து, அந்தக் கேசட்டுடன் வந்தனர். அந்த கேசட் உடைக்கப்பட்டு, படச் சுருள் தீக்கிரையாக்கப் பட்டது.



மாநாட்டு ஊர்வலம்

பின் தொடர்ந்து பவர்ஹவுஸ் அருகில் ஊர்வலம் வந்து கொண்டிருக்கையில், மீண்டும் இரண்டு கேமராக்களுடன் புகைப்படம் எடுக்க க்யூ பிரிவு போலீஸ் முயற்சித்தது. மீண்டும், பெண்கள் கேமராக்களை பறிமுதல் செய்து வரும்வரை, சுமார் அரை மணிநேரம் அங்கேயே முழக்கங்களுடன் சாலை மறியல் செய்யப்பட்டது. சுமார் 7.00 மணியளவில் ஊர்வலம், காமராசர் சாலையிலிருந்து பொதுக்கூட்ட இடத்திற்கு சென்றடைந்தது. ஜனநாயக பூர்வமாக காவல்துறை ஆணையாளரின் அனுமதியுடன் நடந்த ஊர்வலத்தில் திருட்டுதனமாக எடுத்த கேமராக்கள் உடைக்கப்பட்டு படசுருள்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

தீபாவின் உணர்வுபூர்வமான தலைமையுரையுடன் பொதுக்கூட்டம் மாலை 7.15 மணிக்கு ஆரம்பித்தது. கருவிலிருந்து இறக்கும் வரை பெண்கள் சந்திக்கும் பிரச்சனைகளையும், பெண்கள் மீது இந்த சமூகம் தொடுக்கும் ஒடுக்குமுறை பற்றியும் ஆராய்ச்சியாளர் விஜயலட்சுமி விளக்கமாக சிறப்புரை ஆற்றினார். ஆந்திர பிரதேச



படிப்பகம்

www.padippakam.com

மஹிளா சமக்கியாவின் துணை செயலாளரான சுஜாதா, ஆந்திர சந்திரபாபு நாயுடுவின் மக்கள் விரோத, பெண்கள் விரோத போக்குகளையும், தமிழகத்தில் கருணாநிதியின் பெண்கள் விரோத போக்கையும் பற்றி சிறப்புரை ஆற்றினார். த.பெ.க.வின் இறுதி இலட்சியத்தைப் பற்றியும், தமிழக காவல் துறையின் பெண்கள் விரோதப் போக்கைப் பற்றியும் த.பெ.க. மாநிலத் தலைவர் அஜிதா பேசினார். மாநில குழு உறுப்பினர் ஜெனிபா நன்றி கூற பொதுக்கூட்டம் நிறைவுப் பெற்றது.

– மாநிலக் குழு, த. பெ.க

## திருட்டுத் தனமாக எடுத்த படச்சுருள் தீக்கிரையாக்கப்பட்டது ஏன்?

'ஜனநாயக நாடு', 'சுதந்திர நாடு' என்று பறைசாற்றும் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் விதி 19, ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும் பேச்சுரிமை, கருத்துரிமை, விமர்சிக்கும் உரிமையை நிர்ணயிக்கிறது. இந்த ஜனநாயக அடிப்படை உரிமைகளின் அடிப்படையில் பெண்விடுதலை என்ற த.பெ.க.வின் இலட்சியத்தை பொதுமக்களிடம் வலியுறுத்த நடத்தப்பட்டது தான் மாநாடு ஊர்வலம், பொதுக்கூட்டம்! காவல்துறை ஆணையாளரின் அனுமதியுடன் நடத்தப்பட்டது தான் இந்த ஊர்வலம், பொதுக்கூட்டம்! இப்படி சட்டப்பூர்வமாக நடத்தப்பட்ட ஊர்வலத்தில் திருட்டுத்தனமாக பெண்களை புகைப்படம் எடுக்க முயற்சித்த படசுருள்கள் தான் தீக்கிரையாக்கப்பட்டன.

காவல்நிலையம் செயல்பட அதிகாரம் வழங்க கிரிமினல் ப்ரசிஜர் கோர்ட்டில் (Cr.pc) 'யாரையும் அவரின் அனுமதியின்றி புகைப்படம் எடுக்கக் கூடாது என்றும், அப்படி புகைப்படம் தேவைப்படின் நீதிமன்ற அனுமதியுடன்தான் காவல்துறை எடுக்கவேண்டும்' என்றும் தெள்ளத் தெளிவாகக் கூறுகிறது. ஆனால், இந்த சட்டமெல்லாம் வெற்றுப் பேச்சு, நாங்கள் சொல்வது தான் சட்டம் என்று போலீசுக்கான. சட்டத்தை உருவாக்குவதில் வல்லவர்களும், மக்களை ஏமாற்றியே பிழைப்பு நடத்தும் எட்டப்பன்களுமான க்யூ பிரிவு போலீஸ், சட்ட விரோதமாக பெண்ணுரிமைப் போராளிகளை ஊர்வலத்தில் கள்ளத் தனமாக புகைப்படம் எடுக்க முயற்சித்த போது எரிக்கப்பட்டது தான் படசுருள்கள். ஜனநாயகத்தை வாய்சவடால் அடித்துவிட்டு, பாசிசத்தை நிறுவத் துடிக்கும் தமிழக அரசின், இந்த சட்டவிரோதப் போக்கை கண்டித்து எரிக்கப்பட்டது தான் படசுருள்கள்! கேமராக்கள் உடைப்பு!



படிப்பகம்

www.padippakam.com

## த.பெ.க. வின் இரண்டாவது மாநில மாநாட்டுத் தீர்மானங்கள்

1. இந்திய அரசின் மக்கள் விரோதக் கொள்கையால், ரேஷன் அரிசி, மண்ணெண்ணெய், சர்க்கரை மற்றும் இதர அத்தியாவசிய பொருட்களின் அதிகரித்து வரும் விலைவாசி உயர்வை இந்த மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. உயர்ந்து கொண்டே வரும் விலைவாசி உயர்வை எதிர்த்துப் போராட்டப் பாதையில் அணித்திரளுமாறு தமிழக மக்களை இந்த மாநாடு அறைகூவி அழைக்கிறது.

2. சமீப காலங்களாக பெண்கள் மீது வன்முறையை ஏவிவரும் கயவர்களை குறிப்பாக சமீபத்தில் சரஸ்வதியிடம் முறைகேடாக நடந்து கொண்ட சரவணா ஸ்டோர்ஸ் முதலாளிக் கும்பல் மீது கடும் நடவடிக்கை எடுக்கும்படி இம்மாநாடு கோருகிறது.

3. சென்னையில் ஆசிரியை பொன்மணியை பாலியல் வன்முறைக்கு இரையாக்கிய ஐ.ஏ.எஸ். அதிகாரி மீதும், ஒரிசாவில் அஞ்சனாமிஸ்ராவை பாலியல் வன்முறைக்கொடுரத்திற்கு ஆளாக்கிய காமவெறிக் கயவர்கள் மீதும், டில்லியில் ஜெசிகாவை கொன்று காமவெறியை தீர்த்துக் கொண்ட கயவர்கள் மீதும் உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுக்கும்படி இம்மாநாடுக் கோருகிறது.

4. இந்து மத பாசிச சக்திகள் கிறித்துவ, முஸ்லீம் சிறுபான்மை மக்கள் மீது குறிப்பாக பெண்கள் மீது தொடுத்துவரும் வன்முறையை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

5. எவ்வித உரிமைகளும் தரப்படாமல் பெண்களின் உழைப்பை சுரண்டிக் கொள்ளை இலாபம் அடிக்கும் ஏற்றுமதி நிறுவனங்களை குறிப்பாக சென்னையிலுள்ள மெப்சில். பெண்களின் வேலை நிலைகளை மேம்படுத்தவும், தகுந்த ஊதியம் தரவும், தொழிற்சங்க உரிமைகள் வேண்டுமென இம்மாநாடு கோருகிறது.

6. 'வாட்டர்' படத்தை தாக்கி பிற்போக்கு ஆணாதிக்க பார்ப்பனீய பண்பாட்டை உயர்த்திப் பிடிக்கும் பி.ஜே.பி. ஆர்.எஸ்.எஸ். பஜ்ரங்தளின் சனநாயக மறுப்பை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

7. இண்டர்நெட், திரைப்படங்கள், தொலைக்காட்சி என்று அனைத்து தொலை தொடர்பு சாதனங்கள் திட்டமிட்டு திணித்துவரும் மேலைநாட்டு ஆபாசப் பண்பாட்டைத் தடை செய்ய இம் மாநாடு கோருகிறது.

8. உயர்கல்விக்கான மானியத்தை ஒழித்து கல்விக் கட்டணங்களை உயர்த்தியுள்ள இந்திய அரசின் புதியக் கல்வி கொள்கையை எதிர்த்துப் போராட தமிழக மக்களை இம்மாநாடு அறைகூவி அழைக்கிறது.

9. ஈழத்தில் தமிழர்களுக்கெதிராக குறிப்பாக தமிழ் பெண்களுக்கெதிரான சிங்கள இராணுவத்தின் கொலை வெறியாட்டத்தை கண்டிப்பதுடன் நடந்துக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டிருக்கும் ஈழப் போராட்டம் நியாயமானப் போராட்டமென அங்கீகரிக்கப்பட வேண்டுமெனவும், இந்திய அரசு ஈழப் பிரச்சனையில் தலையிடக் கூடாது எனவும் இம்மாநாடுக் கோருகிறது.

10. பீகாரில் 30க்கும் மேற்பட்ட பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களை படுகொலை செய்த மேல் சாதி நிலபிரபுக்களின் கூலிப்படையான ரன்வீர் சேனாவின் கொலைவெறியாட்டத்தை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

11. ஐந்து பேர் கொண்ட மாநிலக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

---

## மரண அடி

"வீட்டுக்குள்ள நொழஞ்சு கொண்ணுட்டேன்".

"நாலு நாளக்கி முன்னாடி வேணாண்ணுட்டு எவனப் பார்த்துப் போனியோ", அவங்கிட்டியே போடி. . ..

"வெளிய துரத்துனது நீங்க தான். ஆனா நான் எந்தம்பி வீட்டுலதான் இருந்தேன்"

"வாய மூடுடி. எதிர்த்துப் பேசறியா. இனிமே அங்கியே இரு. என் வீட்டுக்குள்ள வர விட மாட்டேன்? வந்தீன்னா கொன்னுடுவேன்.

"நான் ஒன்னும் உங்க கையிலே சாக வரலே. நான் சாமான எடுத்து போகத்தான் வந்தேன்."

"அவள தூரத்துக்கு ஆயிடுச்சா. நெனச்சுக்கிட்டே இருந்தேன். பிள்ளைங்களப் பாக்குறதுக்குக் கூட நான் ஒத்துக்க மாட்டேன். வெளியே போடீ"

"நான் ஒருத்தி வாழ்றதே கஷ்டமா இருக்கு. இதுல பிள்ளைங்க எதுக்கு நீங்களே பாத்துக்குங்க. .. நான் சாமான் எடுத்துகிட்டு போறேன்.

"ஆ. ..! அதில்ல கண்ணு!

'எனக்குத் தான் மூக்கு மேல கோபம் வரும்னு தெரியுமில. நீ இல்லாட்டி பிள்ளைகளை யாரு பார்த்துக்குவாங்க சொல்லு. எனக்கு யாரு சமச்சுப் போடுவாங்க. வீட்ட யாரு பாத்துக்குவாங்க. துணியெல்லாம் யாரு தொவக்கிறது. நான் தினமும் ஆபீஸ் போறது எப்படி?'

"வேலக்காரி வச்சுக்குங்க"

"அது சொன்ன பேச்சு கேக்குமா. அது இஸ்டத்துக்கு செய்யும். நீ யாயிருந்தா".

"ஐயோ! இவ்ளோ சீக்கிரமா சாமானெல்லாம் கட்டிட்டியா"

"ஏய் சுகுணா. . . உன்னைத்தான். . . நில்லேன். .. ஐயய்யோ. . . நான் செத்தேன்?



படிப்பகம்

www.padippakam.com

# சதிக்கு சிதை வளர்ப்போம்!

இருபத்தொன்றாம் நூற்றாண்டில் சதியா? சதி அல்லது உடன்கட்டையெல்லாம் மலையேறிப் போய்விட்டதே! நவீன கம்ப்யூட்டர் உலகில் பெண்கள் முன்னேறிக் கொண்டிருக்கும் இக்காலக்கட்டத்தில் சதியெல்லாம் கற்பனையே... என்று நினைத்துக் கொண்டிருக்கின்றோம்.



ஆனால், 'சுதந்திரம்' கண்ட இந்தியாவில் கணவன் இறந்தவுடன் மனைவி உடன்கட்டை ஏறுவது இன்றும் நடைமுறையிலுள்ளது. கடந்த ஆண்டு இறுதியில் உத்திரப்பிரதேசத்தில் சாத்புரா மாவட்டத்தின் சரண்ஷா இக்கொடூரத்திற்கு இரையாகியதை பத்திரிக்கைகள் விவரித்தன. இராஜஸ்தானில் ரூப்கன்வர், கணவன் மால்சிங் இறந்ததும், அவனின் உடல் எரிந்துக் கொண்டிருந்த நெருப்பிலேயே மாமனார், மைத்துனரால் பலவந்தமாகத் தள்ளப்பட்டு உயிரோடு கொல்லப்பட்டார். உடனே, பெண்ணடிமைத்தனத்தை உயர்த்திப்பிடிக்கும் இந்து மதவாத பி.ஜே.பி, ஆர்.எஸ்.எஸ், கும்பல் கணவனின் நெருப்பிலே இறந்த ரூப்கன்வர் 'சதி மாதா' என்றும், செப்டம்பர் –15 'சதிமாதா' விற்கு பூஜை என்றும் அறிவித்தது. சட்டமன்ற உறுப்பினர்கள், அரசியல்வாதிகளின் ஆசியுடன் நடந்தேறியது 'சதிமாதா' பூஜை! மாணவர்கள் மற்றும் பெண்களின் கொந்தளிப்பால் கைது செய்யப்பட்ட மாமனார், மாமியாரை விடுவித்து, 'கணவன் இறந்தபின் மனைவி இறப்பது தான் நியதி', என்று சதிக்கு பக்கபலமாய் இருந்து ஆணாதிக்கச் சிந்தனையை நியாயப்படுத்தியது நீதிமன்றம்!

## சதியின் வரலாற்றுப் பின்னணி :-

இந்திய சமூகத்தில் சதி புதுமையானதல்ல! பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் சமூகம் வர்க்கங்களாக பிளவுண்டு நிலவுடமை சமூகம் தோன்றிய காலந்தொட்டு சதி வழக்கத்தில் உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

நிலவுடைமை காலக்கட்டத்தில், நமது மரபு, சாதி, வர்க்கத்திற்குள் சொத்து தொடர வேண்டும், தான் இறந்தவுடன் மனைவி வேறொரு வர்க்கத்திற்குள், சாதியில் உள்ள ஆடவனைத் திருமணம் செய்து கொண்டால் சொத்து அவன் வழி சென்றுவிடும் என்பதனால், கணவன் இறந்தவுடன் மனைவி எரிக்கப்பட வேண்டும் என்று சதி வலியுறுத்தப்பட்டது. மேலும், மாற்றானை மணந்தால் சாதி, இனம் என்ற கட்டுப்பாடுகள் உடைக்கப்பட்டு சாதி, இன, கலப்பு மணங்கள் ஏற்பட்டு சாஸ்திரம் கூறும் சாதி, இன வேற்றுமைகள் இருக்க வேண்டும் என்பதற்காக அறிவுறுத்தப்பட்டது தான் சதி! அரச குடும்பத்தில் பிறந்த ஆண் இறந்தால், அவனின் உடனடி சந்ததியான பெண் ஆட்சிப்பீடத்தைப் பிடித்து அரசாளக்கூடாது என்ற ஆணாதிக்க வெறியால் புகுத்தப்பட்டதுதான் உடன்கட்டை! கணவனில்லாமல் மனைவிக்கு ஏதுமில்லை என்ற மிக கேவலமான நிலவுடமை சித்தாந்தத்தின் கொடூரமான வெளிப்பாடே சதி! கணவனின் சிதையில் பாய்ந்தப் பெண், தாய் - தந்தை - கணவன் குடும்பத்தைத் தூய்மைப்படுத்துபவளாக நம்பவைக்கப்பட்டாள்! உணவு, உடை, இருப்பிடம், சுயமரியாதை, விருப்பு, வெறுப்பு, கடுமை முதலான பல்வேறு தடைகளை காலமெல்லாம் அனுபவித்து விதவைத் துயரில் துன்புறும் பிற்போக்குப் பண்பாடும், பெண்ணை 'சதி' என்ற நெருப்பிற்குள் தள்ளியது.

புராணங்கள், இந்த சதியை நியாயப்படுத்தின. பக்தி முலாம் பூசி மினுமினுக்கச் செய்தன. இந்து மதம் சதியை கட்டிக்காக்கின்றது. அதற்கான நம்பிக்கைகளை மக்களிடையே பரப்பி வருகின்றது. வரலாற்றை புரட்டிப் பார்க்கையில், பல பெண்கள் சதிக் கொடுமையால் உயிர்நீத்தது தெரியவருகிறது.

கி.பி. 1628 - ல் மதுரையை ஆண்ட நாயக்க மன்னன் இறந்த போது அவனது 700 மனைவியர் உடன்கட்டை ஏறினர். கி.பி. 1659 - ல் திருமலை நாயக்க மன்னன் இறந்த போது அவனது 200 மனைவியர் உடன்கட்டை ஏறியுள்ளனர். கி.பி. 1710 - ல் இராமநாதபுரத்தின் சேதுபதி மடிந்த போது அவனது 47- மனைவியர் உடன்கட்டை ஏறினர். 1807 - ல் புதுக்கோட்டை மன்னன் இறந்த போது இரு சிறு குழந்தைகளுக்குத் தாயான அவன் மனைவியும் தீப்பாய்ந்த கொடுமையை என்னென்பது!

கி.பி. 1811 - ல் இராசாராம் மோகன்ராயின் அண்ணியார் கணவன் சிதையில் தீப்பாய்ந்தார். அதனால் தான் சதியை ஒழிக்க வேண்டும் என்று மோகன்ராய் குரல் கொடுத்தார். 1829, 1834, 1854, 1871, 1914, 1928, 1958 ஆகிய காலகட்டங்களில் 'சதி' கொடுமை பெண்களின் உயிரைக் குடித்ததை வரலாறு நமக்கு சொல்கின்றது.1987 - ல் ரூப்கன்வர் எனும் ராஜஸ்தானியப் பெண் உடன்கட்டை ஏறிய நிகழ்வு உலகறிந்ததே! 52 ஆண்டு சுதந்திரப் பொன்விழா கொண்டாடும் நவயுக இந்தியாவில் சரண்ஷா கொல்லப்பட்டது தொடரும் நிலவுடமையின் இச்சமூகக் கொடுமை தொடர்ந்து வருவதை நிரூபித்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

## சதியும் சட்டங்களும் :-

பிரிட்டிஷ் சதி போன்ற பிற்போக்கு நிலவுடமை வழக்கங்களை பயன்படுத்தி தன்னுடைய காலனிய ஆதிக்கத்தை காப்பாற்றிக் கொண்டது. 1829 – ல் நிசாமத் அதாய குழு சதியை பற்றி 'ஆழ்ந்து ஆராய்ந்து' இது குற்றமல்ல என்று அறிவித்தது. 1829 – ல் ராசாராம் மோகன்ராயின் எதிர்ப்புகளுக்கு பின்னும் வெள்ளையர்கள் சதியை தடைசெய்ய எவ்வித சட்டங்களையும் கொணரவில்லை. ஆனால் மக்களின் கொந்தளிப்புக்கு பின் 'சதி' கொலைக் குற்றமென்று என இந்திய தண்டனை சட்டத்தில் (sec 360 – IPC) பெயரளவிற்கு அறிவித்தது. 1914 – ல் ராம்தயாள் சதி வழக்கிலும், 1928 – ல் வித்யாசாகர் சதி வழக்கிலும் சரியான சாட்சிகள் கிட்டவில்லை என்று எட்டத்தப்பமான தீர்ப்புகளை வழங்கியது. சதிக்கு காரணமான பெண்ணை அக்குற்றத்திலிருந்து மீட்க வேண்டுமென எழுப்பப்பட்ட சட்டம், மீட்டவருக்கே மீண்டும் தற்கொலைக்கான தண்டனையை வகுத்தது. பின்னர் தான் உடந்தையானவர்க்கும் தண்டனை என இணைத்துக் கொண்டது. இதையே 'சுதந்திரம்' வந்துவிட்டதாக தம்மட்டம் அடிக்கும் ஆளும் வர்க்க ஆணாதிக்க ஆட்சியாளர்களும், இந்துமத வெறியர்களும் இன்றும் நடைமுறைப்படுத்துகின்றனர். இதன் வெளிப்பாடகவே, சரண்ஷா வழக்கிலும், உயிரோடு கொல்லப்பட்ட சரண்ஷாவைத் தற்கொலை செய்து கொண்டார் என்று முழு பூசணிக்காயை சோற்றில் மறைத்து ஆளும் கூட்டமும், ஆதிக்க சக்திகளும், மதவாத சக்திகளும் முண்டியடித்து அறிக்கையை வெளியிடுகின்றனர். நிலவுடமை ஆதிக்கமும் பண்பாடும் நிலவி வரும் சமூகத்தில் பெயரளவிலான சட்டங்களால், சமூகக் கொடுமைகளை ஒழிக்க இயலாது என்பதையே 'சதி' வழக்குகள் நிரூபித்து வருகின்றன.

## 'சதியும்' பி.ஜே.பி. யின் அட்டகாசமும் :

பார்ப்பனீயத்தையும், இந்துமதவெறியையும் செயல்படுத்துவதில் ஆதங்கம் கொண்டுள்ள பி.ஜே.பி, இந்துமதவெறியை பரப்பி, பாசிசத்துக்கான சமூக அடித்தளத்தை கட்டுவதை நாமனைவரும் அறிந்ததுதான்! இந்துப் பண்பாட்டை உயர்த்திப் பிடித்து பெண்ணை வீட்டை விட்டு வெளியில் விடாமல் 'இல்வாழ்க்கை' என்ற சிறைக்குள் தள்ளுவது, கணவன் இறந்தவுடன் மனைவியும் உயிரைப் போக்கிக்கொள்ளும் 'சதி'யை நடைமுறைப்படுத்துவது, விதவை ம்றுமணத்தை மறுப்பது போன்ற பெண்ணடிமைத் தனத்தை உயர்த்திபிடிக்கும் பி.ஜே.பி., 1987 – ஆம் ஆண்டு ரூப்கன்வர் சதிக் கொடுமையில் உயிரோடு கொல்லப்பட்ட போது கணவன் இறந்தவுடன் மனைவி இறந்ததை ரூப்கன்வர் 'மாதா' என்று 'கடவுள்' முலாம் பூசி மக்களை ஏமாற்றியது. கரண்ஷா இறந்தவுடனும், சதியை நியாயப்படுத்தியது.

சமீபத்தில், விதவைப் பெண்ணின் பிரச்சனைகளையும், விதவை பெண்கள் விபச்சாரத்திற்குள் சமூகத்தினால் தள்ளப்படுவதையும் விளக்கும் "வாட்டர்'



படிப்பகம்

www.padippakam.com

திரைப்படத்தைத் தடைசெய்யக்கோரி பி.ஜே.பி, ஆர். எஸ்.எஸ் – ன் கலவரங்களும், ரவுடித்தனங்களும் ஊரறிந்த விசயம்தான். பிற்போக்கு பார்ப்பனீய இந்து சமூகத்தில் விதவைகளின் நிலையைப் படம் பிடித்து, இந்த மதப் பிற்போக்கை அம்பலப்படுத்திய "வாட்டர்" திரைப்படத்தை எடுப்பதையே தடுக்க பி.ஜே.பி, சிவசேனா கும்பல் கொடூர தாண்டவமாடியது. பார்ப்பனீய பிற்போக்குத்தனங்களையும், மிக இழிவான பெண்ணடிமைத் தனத்தையும் உயர்த்திப்பிடிக்கும் மனுதர்மத்தை பூஜிக்கும் பி.ஜே.பி. ஆர்.எஸ்.எஸ் கும்பல் 'சதி' போன்ற பிற்போக்குதனங்களை காப்பாற்றும் வேலையில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால், உயிரோடு எரித்துக் கொல்லப்பட்ட ரூப்கன்வரும், சரண்ஷாவும், சதி

விதவைக்கொடுமை, மறையவில்லை ; திரண்டு வா்ருங்கள் ; இனி ஒரு சதியை மூளாமல் முடக்குவோம்! என்று நம்மை விழிப்புறச்செய்து மடிந்துள்ளனர். இந்து மத வெறியை, பிற்போக்கு பெண்ணடிமைத்தனத்தை இலட்சியக் கனவாக நடைமுறைப்படுத்தும் இந்தப் பாசிச பி.ஜே.பி.–யை மட்டுமல்ல, இப்பிற்போக்கு சமூக அமைப்பையே தூக்கியெறியுமாறு நமக்கு அறிவுறுத்துகின்றனர். இக்கொடுமைகளை அடியோடு ஒழித்துக்கட்ட அணிதிரள்வோம்!

– பொன்னி

---

## சிறை

பெண்ணே,
உன் குடும்பம்
உனக்கு சிறை
காதலன் அன்பு சிறை
கணவன் கட்டளை சிறை
சிறை கம்பிகளால்
உனக்குத் தடை இல்லை
உன் அடிமை
உணர்வே உனக்குத் தடை

– ஸ்வரூபா

*அடித்துப் பிடித்து ஓடும் தாய்,*
*கையில் பசியுடன் குழந்தை*
*கோயிலில் பாலாபிஷேகம் !*

*- பரமேஸ்வரி*



படிப்பகம்

www.padippakam.com

# பெண்கள் - 2000

உலகப் பெண்கள் மாநாடு, சீனாவின் பீஜுங்கில் ஜுன் 5-ம் தேதி முதல் 10 ஆம் தேதி காலை 5-00 மணி வரை 180 நாட்டு பிரதிநிதிகளுடன் நடந்தேறியது. இந்தியாவிலிருந்து 18 பெண் எம்.பிக்கள் முரளி மனோகர் ஜோசியின் தலைமையில் இம்மாநாட்டில் கலந்துக் கொண்டனர். 1995 -க்கு பின் ஐந்தாவது மாநாடு பீஜுங்கிலேயே நடத்தப்படுவதால், இம்மாநாட்டை பீஜுஸ் +5 என்றும் அழைத்தனர். அதிகார வர்க்க பிர்திநிதிகள், அரசியல் நிபுணர்கள், தன்னார்வுக் குழு பிசதிநிதிகளுடன் ஏ.சி.ரூமில், பெண்கள் 2000 : பாலியல் சமத்துவம், இருபத்தொன்றாம் நூற்றாண்டுக்கான வளர்ச்சியும், அமைதியும் பற்றி இம்மாநாடு விவாதித்தது. ஏற்கனவே, மார்ச் 15 - 18 தேதிகளில் நியூயார்க்கில் அரசு பிரதிநிதிகள், சர்வதேச இயக்கங்கள், மற்றும் தன்னார்வக் குழு பிரதிநிதிகளுடன் ஐ.நா. பொதுசபை விவாதித்து திட்டமிட்டதை - உலகமயமாக்கல் வேகமாக பெண்களை சென்றடையும் வழிகளையும், பாராளுமன்றத்தில் பெண்களுக்கான பங்கை அதிகபடுத்துவதையும் குறித்து திட்டங்களை - மாநாட்டில் சிறப்பு கூட்டமாக நடத்தி தீர்மானங்களை நிறைவேற்றியது.

பெண்களும் வறுமையும், முடிவு எடுப்பதில் பெண்களுக்கான பங்கை அதிகப்படுத்துவது போன்றவற்றை இம்மாநாடு வலியுறுத்தியது. மக்களின், பெண்களின் வறுமைக்கு முக்கியக் காரணமான அமெரிக்காவை முக்கிய பிரதிநிதியாகக் கொண்ட ஐ.நா. சபை, ஏனைய அதிகார வர்க்க பிரதிநிதிகளுடன் கூட்டு சேர்ந்து பெண்களின் வறுமையைத் தீர்க்க மாநாடு கூட்டியதாம்! எத்துனை போலித்தனம்! வேடிக்கையாக இல்லை! ஹில்லாரி கிளிண்டன், ஜெயலலிதா போன்ற அதிகார வர்க்க பெண்கள் ஆட்சிப் பீடத்தை பிடித்து ஏழைப் பெண்களை சுரண்டி ஒடுக்கத்தானே இந்த மாநாடு!

இந்த மாநாட்டில், உலகிலேயே பெண்களின் உடலை வியாபாரமாக்கி பல கோடிகள் சம்பாதிக்க வழிவகித்துள்ள மனித உரிமையை நசுக்குவதில் காரணகர்த்தாவாக செயல்பட்டுவரும் ஏகாதிபத்தியவாதி கிளிண்டனின் மனைவி ஹில்லாரி ரோதம் கிளிண்டன், பெண் உரிமை என்பது மனித உரிமையே என்று வாய்க்கிழிய பேசியுள்ளது, நம்மை நகைக்க வைக்கிறதல்லவா?

1995 மாநாட்டு திட்டங்களை பரிசீலிப்பது, திட்டங்களை நடைமுறைப்படுத்த உள்ள தடைகள், வருங்கால புதிய மற்றும் வளர்ந்துவரும் போக்குகளை கண்டறிந்து நீண்ட கால திட்டத்தை வகுக்கும் - நிகழ்ச்சி நிரலில் இருந்ததை ஒட்டி, முரளி மனோகர் ஜோசி இந்திய நாட்டு "வளர்ச்சியை' விவரித்தார்.

இந்தியாவில் 40% பாலியல் வன்முறை அதிகரித்துள்ளதாகவும், 15% வரதட்சணை கொலைகள் அதிகரித்துள்ளதாகவும், 1997 - 1998 -க்குள் 87.2%



படிப்பகம்

www.padippakam.com

பெண்கள் இறக்குமதி செய்வது அதிகரித்துள்ளதாகவும் தேசிய குற்றவியல் அறிக்கையின் புள்ளிவிவரத்தை படித்தவுடன், இது குறித்து கேள்விகள் எழுப்பப்பட்டபோது, 'மேற்கத்திய நாடுகள் அவர்களின் நாடுகளில் நடந்த குற்றங்களை பற்றி அறிக்கையே தரவில்லை, நாங்கள் தந்துள்ளோம்' என்று பெருமையுடன் பூசி மெழுகினார்.

இந்தியாவின் யதார்த்த நிலை இப்படியிருக்க, ஏ.சி. ரூமில் அதிகாரவர்க்க பெண்களுடன் ஆளும் கூட்டமும் ஏகாதிபத்திய பெருச்சாளியான அமெரிக்கா நடத்திய இந்த மாநாடு, கஷ்டப்படும் பெண்களின் வறுமையை ஆழப்படுத்தி, மேலும் பெண்களை சவக்குழியில் தள்ளுவதை உறுதியேற்றுள்ளது என்பது திட்டவட்டமாக நம்முடைய கடந்த கால வரலாற்றிலிருந்து புரிந்து கொள்ளலாம். – சுவர்ணா

## ஆகாயத்தில் பறக்கும் விலைவாசி

முதலாளிங்க ஆட்சியில
முதலாளி கை குலுங்குது!
வேணுமுன்னா விலையை ஏத்துறான்
வேணாமுன்னா விலையைக் குறைக்குறான்.

ரேஷன் அரிசி சர்க்கரை - விலை
ஏத்துறான் அளவைக் குறைக்கிறான்
இலவசமா மின்சாரமின்னு பூச்சாண்டி காட்டுறான்
வசதி படைச்ச விவசாயிக்கே தானமாகக் கொடுக்கறான். (முத)

இந்தியாவுல தொழில் புரட்சி நடக்குதாம்
செல்லு, கம்ப்யூட்டர் வாங்கினாக்கா
ஏராளமாய் சலுகை கிடைக்குதாம்
தாராளமாய் வாரிவாரிக் கொடுக்குறான். (முத)
மண்ணெண்ணெய் டீசல் விலையை ஏத்துறான்
மக்கள் மனசுல தீ நெருப்பைத் தானே மூட்டறான்
பொங்கல் சமயத்துல துணிமணியும் கொடுக்குறான்.
அதையும் கட்சி போட்டவனே கேக்குறான் (முத)
எத்தனையோ கட்சிகளும் ஆட்சி, பண்ணப் பாத்தாச்சு
ஏழைசனம் ஏழ்மையிலே மிதந்துக்கிட்டே இருக்குது
முதலாளி இருக்கையிலே சுரண்டலும் இருக்கும்
இந்த சுரண்டலை ஒழிக்கணுமுன்னா உழைக்கரவங்க
கை கோர்த்து நிக்கணுமே! – பரமேஸ்வரி



படிப்பகம்

www.padippakam.com

# சீனப் புரட்சியில் பெண்களின் பங்கு

– தேன்மொழி

சீனா ஒரு விவசாய நாடு) கிராமங்கள், நகரங்கள் சூழ காடுகள் நிறைந்தது சீனா. சீனப்புரட்சிக்கு முன், சீன கிராமங்களில் பின் தங்கிய விவசாய உற்பத்தியுடன் பண்ணையார்களின் ஆதிக்கம் தலைதூக்கி இருந்தது. 1930– காலக்கட்டங்களில் ஜப்பானின் நேரடி ஆக்கிரமிப்பை சந்தித்தது. சீனா நிலவுடமை சுரண்டலையும், ஏகாதிபத்திய சுரண்டல் நிலவிய ஒரு அரை நிலபிரபுத்துவ அரைக் காலனிய நாடாக இருந்தது.

சீன கம்யூனிஸக் கட்சி 1921 – ஆம் ஆண்டு உருவானது. ஏகாதிபத்திய சுரண்டலையும், நிலப்பிரபுத்துவ சுரண்டலையும் தூக்கியெறிந்து புதிய ஜனநாயகப் புரட்சியை தன்னுடைய நோக்கமாகக் கொண்டு செயல்பட்டது. 1930 – காலக்கட்டத்தின் ஜப்பானிய ஆக்கிரமிப்பை வீறுகொண்டு எதிர்த்து ஜப்பானை வீழ்த்தியது. விவசாயப் புரட்சியை மையமாகக் கொண்டு, 1949 – ஆம் ஆண்டு கோமிங்டாங்கை (சீன ஆளும் வர்க்கத்தை) வீழ்த்தி புதிய ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்றி, உலகிற்கே எடுத்துக்காட்டாய் நின்றது. சீனப் புரட்சி நிறைவடைந்து இன்றுடன் ஐம்பதாண்டுகளாகின்றது. சீனப் புரட்சியின் பொன்விழா ஆண்டில் சீனப் புரட்சியில் பெண்களின் வீரஞ்செறிந்தப் பங்கு பற்றி தெரிந்துக் கொள்வது, பெண் விடுதலைக்காக, சமூக மாற்றத்திற்காக போராடும் நம் ஒவ்வொருவரின் கடமையல்லவா? எனவே, இனி, சீனப் புரட்சியில் பெண்களின் பங்கு பற்றி ஆழமாகப் பார்ப்போம்! சீன கம்யூனிச கட்சியின் தோற்றத்திற்கு முன் பெண்களின் போராட்டங்கள், கட்சி தோன்றிய பின் பெண்களின் வளர்ச்சி, புரட்சிக்கு பின் பெண்களின் நிலை, பண்பாட்டு புரட்சியின் காலக்கட்டத்தில் பெண்களின் நிலை, இறுதியாக இன்றைய நிலை வரை பார்ப்போம்.

1850 – 1865 காலக்கட்டத்தில் பலதாரமணம், அடிமை, பெண்கள் பல ஆண்களுடன் உறவு வைத்துக் கொள்ளுதல், பெண்களின் பாதங்களைக் கட்டுவது



பெண்களின் பாதங்கள் கட்டப்படுவதென்பது 11 வது நூற்றாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. பணக்காரப் பெண்கள் முதல் விவசாயப் பெண்கள் வரை அனைவரிடமும் பரவலாயிருந்தது. பெண் குழந்தைகள் மூன்று அல்லது நான்கு வயதிருக்கும் போது அவர்களின் பாதவிரல்களில் பெரு விரலை மட்டும் விடுத்து அனைத்து விரல்களும் மடிக்கப்பட்டு பேண்டாஜால் இறுக்கமாக கட்டப்படுகின்றன. இரண்டு வருடங்களுக்குப் பின், பெருவிரலும், குதிகாலும் ஒன்றாக இணைக்கப்பட்டு, வில் போல துளைப்பதால், அதிக வலியுடன் சுமுகமாக நடக்க இயலாமல் பெண் தவிக்கின்றாள். அவளின் சிறிய கூர்வல்களில் பதித்து, இடுப்பை ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்கு அசைப்பது என்பது, 'காற்றாடி வகை மரம் காற்றில் ஆடுவதைப்' போலிருக்கும்



படிப்பகம்

www.padippakam.com

போன்ற கொடுமைகளை முடிவுக்குக் கொண்டுவரவும், சியாங் அரசாட்சியை தூக்கியெறியவும் பெண்கள் போராட்ட களத்திலிரங்கிப் போராடியுள்ளனர். குங்டாங்கிலுள்ள ஷண் மாவட்ட பெண் பட்டாடை தொழிலாளர்கள், இந்த நூற்றாண்டு முடிவதற்கு முன் ஆணாதிக்க குடும்ப அமைப்பில்லாத ஒரு கூட்டு வாழ்க்கையை உருவாக்கினர். இதே காலக்கட்டத்தில் சியுசின் என்ற ஆசிரியர் பெண்களின் ஒடுக்குமுறைகளை எதிர்த்துக் கட்டுரை எழுதியதற்காகவும், அரசாட்சியை தூக்கியெறியும் இயக்கத்திற்கான ஆயுதப்படை உருவாக்க மாணவர்களை உற்சாகமூட்டியதற்காக ஷாங்காயில் தூக்கிலிடப்பட்டார். 1911 புரட்சியில் பெண்கள் படை கலந்துக் கொண்டது. இதற்குப் பின் அரசியலமைப்பு சட்டத்தில் பெண்களின் உரிமைகள் இணைக்கப்பட வேண்டுமென்ற பெண்களின் போராட்டம் பாராளுமன்றத்தையே நடுங்க வைத்தது. குடியரசு அரசின் தலைவரான சன்யாட்சென்; இறந்தபின் நகரப்பெண்கள் நிலவுடமை வழக்கங்களையும், சட்டங்களையும் கேள்விக்குறியாக்கினர். இக்காலக்கட்டத்தில் நகர்புற அறிவுஜீவிகளை உள்ளடக்கிய பெண்கள் இயக்கம் தோன்றியது.

இக்காலக்கட்டத்தில் மாவோவின் நண்பரான சியாவ்வுவின் சாவுசிச்சிக்கு அவரின் விருப்பத்திற்கு மாறாக கட்டாயத் திருமணம் செய்ய ஏற்பாடுகள் நடைபெற்றதால் அவர் தற்கொலை செய்துக் கொண்டார். இதைக் கண்டித்து மாவோ ஒன்பது கட்டுரைகள் எழுதினார்.

பல பெண்களை ஆண்கள் வைத்திருப்பதையும், விபச்சாரம், சூதாட்டம், பாலியம், வக்ககிரங்களையும் எதிர்த்தது. பெண்களுக்கு மட்டும் 'கற்பு' வலியுறுத்தும் ஆணாதிக்க இரட்டை முகத்தையும் எதிர்த்தது. 'புதிய மக்கள் படிப்பு சமூகம்' மாவோவின் உதவியால் உருவானது.

## மே – 4 இயக்கம் :-

1914 கூலி உயர்வுகளான முதலாளிகளின் கொடுமையை எதிர்த்து கைத்தறிப் பெண் தொழிலாளர்களின் போராட்டம் முக்கியம் வாய்ந்தது. பெண்ணை அடிமையாக வைக்கும் குடும்ப அமைப்பு பெண்ணிற்கான விவாகரத்து உரிமையோ, பிரச்சனைகளிலிருந்து வெளிவருவதற்கான எவ்வித வழியும் இல்லாததால், பல பெண்கள் கொல்லப்பட்டனர் தற்கொலை செய்துக் கொண்டனர். பெண்களின் குடும்ப அமைப்பிற்குள்ளிருக்கும் நீண்ட கால முரண்பாட்டையும் எதிர்த்து இந்த மே – 4 இயக்கம் முதன்முதலில் குரல் கொடுத்தது. பெண்களின் சமூக அரசியல் உணர்வுகளை பரிசீலத்ததனால், இந்த மா– 4 இயக்கம் முக்கியத்துவம் பெற்றது.

1913 காலக்கட்டத்தில் வளர்ச்சியடைந்த பெண்கள் இயக்கம், மே – 4 இயக்கத்திற்குப் பின் பல்வேறு பெயர்களில் பெரிய நகரங்களில் உருவானது. 1920



படிப்பகம்

www.padippakam.com

காலக்கட்டத்தில் பெண்கள் இயக்கங்களில் மேலும் சில மாற்றங்கள் ஏற்பட்டன. பெண்கள் அரசியலில் பங்கேற்காமல் பெண்களின் முழு நிலையை அடைய முடியாது? என்று பெண்களும் சீருடை அணிந்து அரசியல் செயல்வீரர்களாயினர்.

1924 ஆம் ஆண்டும் பெண்களுக்கு சட்டத்தில், பொருளாதாரத்தில், கல்வியில் சமஉரிமை கொடுக்க வேண்டிய கோரிக்கையை முன்வைத்து வட சீனப் பகுதியை ஒட்டி பெண்கள் இயக்கம் தோன்றியது. நகர்புறங்களில் தொழிற்சாலைகளில் வேலை கோரியும், வேலை செய்யும் நிலையை உயர்த்தியும், குழந்தை பெறுவதை தடுக்கும் முறைகளை அதிகரிக்க போராட்டங்கள் செய்தனர். ஆனால், அதே சமயம் 1927 – ஆம் ஆண்டு ஷாங்காயில் முற்போக்கு தொழிலாளர்களும், செயல்வீரர்களும் கோமிங்டாங்கால் (சீன ஆளும் வர்க்கம்) கொல்லப்பட்டனர். விடுதலையின் அடையாளமாக பாப் முடியை வைத்திருக்கின்றனர் என்பதற்காகவே ஆயிரக்கணக்கானப் பெண்கள் கொல்லப்பட்டனர். இந்நிகழ்ச்சிக்குப் பின் ரஷ்ய கம்யூனிஸக் கட்சி, கோமிங்டாங்குடனான உறவை துண்டித்துக் கொண்டு சீன கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து கொண்டது. உழைக்கும் பெண்கள், முதலாளித்துவ அறிவுஜீவிகளின் கோமிங்டாங்குடனான உறவைத் துண்டித்துக் கொண்டனர்.

## சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தோற்றமும் பெண் விடுதலைக்கான வளர்ச்சியும் :

1920 – 30 காலக்கட்டத்தில் கிராமப்புறங்களில் பின்தங்கிய உற்பத்தியே நிலவி வந்தது. சில பெண்கள் **சீன கம்யூனிஸக் கட்சியுடன் இணைந்து கொண்டதால், நிலப்பிரபுத்துவ கொடூர தாக்குதலிலிருந்துத் தப்பினர். சீன கம்யூனிஸக் கட்சியின் 1934—35 நீண்டப் பயணத்தில் 50 பெண்கள் இறுதிவரை கலந்து கொண்டு, சமூக மாற்றத்திற்கு தங்களின் வீரஞ்செறிந்தப் பங்காற்றினர்.**

1935 – ஆம் ஆண்டு மாவோ, சீன கம்யூனிஸக் கட்சியில் தலைமையை ஏற்றபின் பெண் விடுதலைக்காக கட்சி செய்யவேண்டிய வேலைகளை பரிசீலித்து, அரசு ஒடுக்குமுறை, குல ஒடுக்குமுறை மத ஒடுக்குமுறை, கணவனின் ஒடுக்குமுறை என்று நான்கு ஒடுக்கு முறைகளில் தவித்துவரும் **பெண்களின் விடுதலை சமூக விடுதலையோடு ஒன்றிணைந்தது** என்று அறிவித்தார்.

சீனாவிற்குள் ஜப்பானின் ஆக்கிரமிப்பை எதிர்த்தப் போராட்டத்தில் பெண்களின் வீரம்செறிந்த பங்களிப்பு, கிராம வாழ்க்கையில் அவர்களின் மதிப்பை உயர்த்தியது. கோமிங்கடங்கும் – சீன கம்யூனிஸக் கட்சிக்கும் இடையே பிளவு கூர்மையடைந்தவுடன், "கசப்பானவற்றைப் பேசு' என்ற கூட்டமர்வின் மூலம் நிலபிரபுக்களின், தந்தையின், கணவனின் அதிகாரத்தை எதிர்த்து பெண்கள் போராட ஊக்குவிக்கப்பட்டனர். இக்



படிப்பகம்

www.padippakam.com

கூட்டமர்வுகள் கிராம கூட்டங்களாக போடப்பட்டு பெண்களின் பிரச்சனைகள் விளக்கப்பட்டன. எட்டாவது வழி இராணுவத்தினர், நிலப்பகிர்வின் மூலம் வடசீனாவில் ஜப்பானை வெளித்தள்ளி விடுதலை மண்டலங்களை நிறுவினர். நிலசீர்திருத்தங்களிலும் பெண்கள் பங்கெடுக்கும் உரிமையைக் கோரினர் ; புதியதாக உருவாக்கப்பட்ட ஆட்சி அமைப்பில் தங்களுக்கான மதிப்புத் தரப்படவேண்டும் என்று கோரிக்கையை பெண்கள் முன்வைத்ததன் வளர்ச்சியைப் பார்த்து உற்சாகமடைந்த மாவோ, **'நாடு முழுதும் பெண்கள் எழுச்சியுரும் நாளே, சீனபுரட்சிக்கான வெற்றிநாள்**'' என்று அறிவித்தனர்.

கட்சியின் வளர்ச்சிக்குப் பின் நிலவுடமை வழக்கங்களும் மறைய ஆரம்பித்தது. வயல் வேலைகளில் பெண்களை விலக்கி கால்பாதங்கள் கட்டப்படும் (Foot binding) வழக்கத்திலிருப்பினும், பெண்கள் இயக்கங்கள் இதை எதிர்த்துப் போராடின. பெண்களை ஆண் பிள்ளைகளை பெற்றுத்தரும் இயந்திரமாக்கி, வீட்டுக்குள்ளே வடசீஞவில் அடக்கி வைக்கப்பட்டனர். திருமணமானபின், தன் தாய் வீட்டு சூழலிருந்து விலக்கப்பட்டாள். கணவனாலோ, மாமியார் வீட்டினாலோ வெளித்தள்ளப்படும் மனைவிகள், அவள் பிறந்த கிராமத்தில் வரவேற்கப்படவில்லை. பணக்காரர்கள் பல மனைவிகளுடன், வைப்பாட்டிகளுடன் உல்லாச வாழ்க்கை வாழ்ந்தனர். ஏழைப் பெண்களின் தந்தைகள், தங்களின் மகள்களை, வறுமையின் காரணமாக விபச்சாரத்திற்கு (அல்லது) வைப்பாட்டிகளாக இருக்க விற்றனர். வாடகைக்கு குடியிருக்கும் விவசாய மனைவிகளும் பெண் குழந்தைகளும் நிலப்பிரபுக்களால் காமப்பசிக்கு இரையாயினர்.

கம்யூனிஸக் கட்சியில் 'கசப்பானவற்றைப் பேசு' என்ற கூட்டமர்வு, இவ்வழக்கங்களை கேள்விக்குறியாக்கியது. தேசிய விடுதலைப் போராட்டத்தில் பல இளம் பெண்கள் செயலூக்கத்துடன் பங்காற்றினர்.

கம்யூனிஸக் கட்சியின் பெண்கள் காங்கிரஸ் ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் மூன்று (அல்லது) ஆறு மாதத்திற்கு ஒரு முறை கூடியது. 1937 – ல் கம்யூனிஸக் கட்சியின் செயல்வீரர்களாக ஷான்சி – பகுதியில் மட்டும் 7000 பெண்கள் இருந்துள்ளனர். பெண்கள் இயக்க வேலைகளில் 1300000 பெண்கள் ஈடுபட்டுள்ளனர். இப்பெண்கள் நெசவு செய்வது, இராணுவத்திற்கான சீருடை, ஷுக்கள் தைப்பது, இராணுவத்திற்கான உணவு சேகரிப்பது, விவசாயத்தின் வளர்ச்சியை ஏற்படுத்துவது போன்ற வேலைகளை செய்தனர். இரண்டரை ஆண்டு காலத்தில் 5 கோடி ஜோடி பூட்ஸ்களை பெண்கள் இராணுவ வீரர்களுக்கு செய்துக் கொடுத்தனர். 1947 – ல் தாய் ஹாங் மலைப் பகுதியில் 7,00,000 பெண்கள் 100 நாட்களில் நெசவு நிகழ்ச்சியை நிர்வகித்து 5,06,00,000 சதுர அடி துணியை தயார் செய்தனர். இது இராணுவத்திற்கு மட்டுமல்லாமல், அப்பகுதி மக்களுக்கே பயனுள்ளதாக இருந்தது. இது மட்டுமல்லாமல், மக்கள் இராணுவம் அப்பகுதிகளுக்கு வந்திருந்த போது,



படிப்பகம்

www.padippakam.com

அவர்களுக்கான உணவு ஏற்பாட்டை பெண்களே செய்தனர். சிறு சிறு ஊர்திகளிலும் மாவு இடித்து ஒரு நாளில் 1500 கிலோ மாவை இராணுவ வீரர்களுக்குக் கொடுத்தார்கள்.

ஆண்கள், யுத்தப் பகுதிக்கோ, அல்லது மற்ற வேலைகளுக்கோ செல்லும்போது விவசாய வேலைகளையும் பெண்களே பார்த்துக் கொண்டனர். ஏர், உழுவது, நடவு நடுவது, அறுவடை செய்வது போன்ற அனைத்து வேலைகளையும் பெண்கள் சரியான

நான்கிங் மாவட்டத்தில் பாதங்கள் திட்டமிடல், விவசாய தொழிலாள சங்கத்தில் சேர்ந்தனர். சிவப்பு படைகள் அமைக்கப்பட்ட போது, சில பெண்கள், "எங்களின் கால்களை பாருங்கள் பெரியதாக இருக்கின்றது. அவை கட்டப்படவில்லை. நாங்கள் ஆண்களைப் போல நடக்கலாம்; வேலை செய்யலாம். ஆண்களைப் போல நாங்களும் வலிமையானவர்கள் : எங்களுக்கு துப்பாக்கியைக் கொடுங்கள் ! என்றனர்.

காலகட்டத்தில் செய்தனர். மேலும், மக்கள் இராணுவத்தின் அரிசியையும், உணவையும் எதிரியின் கண்ணில் படாமல், மறைத்து வைத்து இராணுவத்திற்குக் கொடுத்தனர்.

இதுமட்டுமல்லாமல், துப்பாக்கிச் சூட்டிற்கு இடையேயும் ஆண்களுடன் சேர்ந்து, மருத்துவக் குழுவிலிருந்தப் பெண்கள் யுத்தப் பகுதிக்குச் சென்று அடிபட்டவர்களுக்கு சேவை செய்தனர். இராணுவத்துடன் சேர்ந்து நோயாளிகளைக் கொண்டு செல்லும் ((ஸ்டெட்சர்) கிடைக்காத நேரத்தில், இராணுவத்துடன் சேர்ந்து காயப்பட்ட இராணுவ வீரர்களை மருத்துவ வசதி இருக்கின்ற பகுதிக்குத் தாங்களே தூக்கிக் கொண்டு சென்றனர். இடைவிடா மழையிலும், மண் குழியிலும், மழைத் தண்ணீரிலும் நனைந்தபடியே ஒரு மாதத்திற்கு மேலாகப் போராடி இராணுவ வீரர்களை மீட்டுள்ளனர். இவ்வாறு, சீன புரட்சிக்கு பெண்கள் வீரம்செறிந்த பங்காற்றியதைப்பற்றி வரலாறு நமக்கு தெளிவாக விளக்குகிறது.

## சீன புரட்சிக்குப் பின்

சீன 1949 சீன கம்யூனிஸக் கட்சியின் தலைமையில், கோமிங்டாங்கை தகர்த்தெறிந்து பாட்டாளி வர்க்க தலைமையில் உழைக்கும் மக்கள் ஆட்சியை நிறுவியது. புரட்சிக்குப் பின் ஆண் – பெண் சமத்துவத்திற்காக, மரபு நிலவுடமை வழக்கங்களைத் தூக்கியெறியவும், கூட்டு சிந்தனை கூட்டு உழைப்பை உருவாக்க கம்யூன்களையும் ஏற்படுத்தி பெண் உரிமையை நிலை நாட்டியது.

அனைத்து சீனப் பெண்கள் கூட்டமைப்பு (1947) உருவாக்கத்திற்குப்பின் அனைத்து சமூக – வர்க்க பெண்களையும் இணைத்து புதிய அரசை, முற்போக்கு திருமண சட்டங்களை உருவாக்க முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. பழைய மரபு பழக்க



படிப்பகம்

www.padippakam.com



தெருக்களை சுத்தம் செய்யும்
மக்கள் கம்யூனின் கூட்டு வேலை

வழக்கங்கள் சட்டவிரோதமாக்கப் பட்டன. புதிய ஜனநாயகப் புரட்சியின் பகுதியாக, பெண்கள் – சொத்துரிமை, விவாகரத் துரிமை, குழந்தை பராமரிக்கும் ஊரிமை, வாரிசுரிமை, விருப்பத் திற்கேற்ப திருமணம் செய்யும் உரிமை என்று அனைத்து உரிமைகளையும் பெற்றனர். 50–களின் ஆரம்பக் கட்டத்தில் புதிய சட்டங்களை நடைமுறைப் படுத்தும் அதிகாரம் பெண்களி டம் கொடுக்கப்பட்டது. பொறுமை யுடன், அதிக தியாக உணர்வுடன் பெண்கள் இக்கடமையை நிறைவேற்றினர். பெண்களை துன்புறுத்தும் ஆண்களை பெண்கள் குழு விசாரித்தது. கற்பழிப்பவர்களுக்கு தூக்கு தண்டனை கொடுத்தது. பெண் உரிமையை மக்களுக்கு விளக்க சினிமா தியேட்டர் குழுக்கள் உதவின.

1958 – ல் 'மாபெரும் முன்னோக்கிய பாய்ச்சல்' பெண்கள் கீழான நிலையிலிருந்து வெளிவர உதவியது. சோசலிச பொருளாதாரக் கட்டமைப்புகளின் அறிமுகம் என்பது, குழந்தை பராமரிப்பு, டோபி தொழில்களில் பெண்கள் ஆண்களுடன் சேர்ந்து வீட்டு வேலைகளில் இணைந்தனர். மக்கள் கம்யூன்கள் உருவாக்கப்பட்டன. வேலைத் தளங்களில் சமத்துவமும், புதிய கைவினைத் தொழிற்சாலைகளின் உருவாக்கமும் பெண்களை ஊக்குவித்தன. பெண்கள், கிராமங்களிலும், நகரங்களிலும் வேலைக்குச் சென்றனர். தாய்மார்கள் வேலைக்கு சென்ற பின் 80% குழந்தைகள் கிராம கம்யூன்களில் பேணி காக்கப்பட்டனர். நகரங்களிலும் குழந்தை பராமரிப்பு மையங்கள் உருவாயின. வீட்டு வேலைகளையும் ஆண்கள் பகிர்ந்துக் கொண்டனர். அனைத்து வேலைகளும் சமூகமயமாக்கப்பட்டன.

மருத்துவத்திலும், தொழில்நுட்பத்திலும், அனைத்து துறைகளிலும் முதலாளித்துவ நாடுகளை விட சீனாவில் பெண்களின் பங்களிப்பு அதிகமானது கல்வி, வயோதிகர்களை கவனித்தல், குழந்தை பராமரிப்பு, நூற்பு போன்ற தொழில்களில் பாலியல் ரீதியான பிரிவினையை எதிர்த்து சம உரிமையாக வெளியிடங்களில் பெண்கள் போராடினர்.

– அடுத்த இதழில் தொடரும்



படிப்பகம்

www.padippakam.com

... செய்தித் துளிகள் ... ... செய்தித் துளிகள் ... ... செய்தித் துளிகள் ...

## உழைக்கும் பெண்கள் தினம் கொச்சைப்படுத்தப்படுவதை எதிர்த்திடுவோம் !

மார்ச் – 8 உழைக்கும் பெண்கள் தினம்! ஊதிய உயர்வு வாக்குரிமைக்காக உழைக்கும் பெண்கள் போராடிய நாள்! மார்ச் – 8 அன்று ஆளும் கும்பலும், இந்திய பொருளாதாரம் திறந்து விடப்பட்டதனால் இந்தியாவில் அலைமோதும் பன்னாட்டுக் கம்பெனிகளும் அழகிப் போட்டி, கோலப் போட்டி நடத்தி உழைக்கும் பெண்கள் தினத்தை கொச்சைப்படுத்தி வருகின்றன. இந்த ஆண்டு மார்ச் – 8 அன்று மும்பாயில் குளியலறை சாதனங்களை உற்பத்தி செய்யும் பன்னாட்டுக் கம்பெனி, தன்னுடைய சந்தையை விரிவுப்படுத்தி கொள்ளை இலாபமடைய இத்தருணத்தைப் பயன்படுத்தியது. பெண்களுக்கான இரயில் பெட்டிகளை அலங்கரித்து பெண்களுக்கு உடலை பராமரிக்கும் பொருட்கள், அழகு சாதனப் பொருட்களை பரிசாகக் கொடுத்து தன் சந்தையைப் பிடிக்கத் தயாரானது. இந்நாளில் பெண்களுக்கான சொத்துரிமை நடைமுறைப்படுத்த வக்கற்ற இந்திய அரசும் இந்நாளில் பெண்களுக்கான முகஅழகு பௌடரை சமையல், எண்ணெயை விளம்பரம் செய்வதில் கவனத்தைக் குவிக்கின்றது.

இந்திய ஆளும் கும்பலும், பன்னாட்டு கம்பெனிகளும் கூட்டு சேர்ந்து உழைக்கும் பெண்கள் தினத்தை கொச்சைப்படுத்துவதை இனங்காண்போம்!

## உலகமயமாக்கலில் பெண் உடல் நல பாதிப்பு

இந்தியப் பொருள்ாதாரத்தை சர்வதேச பொருளாதாரத்துடன் இணைப்பதற்கான வேலைகளை, இந்திய ஆளும் கும்பல் துரிதமாக செய்துவருவதனால், இந்திய மக்கள் பல்வேறு வகைகளில் பிரச்சனைகளில் சிக்கித் தவித்து வருகின்றனர். சமீபத்தில் இந்து நாளிதழ் உலகமயமாக்கலால் பெண்களுக்கான சுகாதார கேடுகளைப் பற்றி விவரித்தது.

உலகமயமாக்கலால், அனைத்து துறைகளும் தனியார் மயமாக்களால் சுகாதாரத் துறைக்கான அரசின் ஒதுக்கீடு குறைக்கப்படுவதால் அரசு மருத்துவமனைகளில் பல ஏழை கூலி விவசாய தொழிலாளப் பெண்களின் வாழ்வு சூறையாடப்படுகின்றது. பெண்களுக்கு சொல்லாமலேயே கேடுபயக்கும் சந்தையிலுள்ள கர்ப்பத்தடுப்பு முறைகள் பெண்களின் மீது திணித்து, அவர்களை பரிசோதனைக்கான எலி போலப் பயன்படுத்துவதால் புற்றுநோய் பெருகி வருகிறது.

தொற்று நோய்களான காசநோய், மலேரியா, காலரா மஞ்சள் காமாலை, பேறுக் காலத்தின் போது பெண்களை பெரிதும் தாக்கி மரணமடையவைக்கிறது. காச நோய் பெண்களின் பேறுகால இறப்பில் பெரும்பங்கு வகிக்கிறது. இந்தியா தான் குழந்தைப் பெறும்போது ஏற்படும் மரணத்தில் முதலிடத்தில் உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



மேலும், ஏகாதிபத்தியங்களின் வேதியியல் உரங்கள், உயர் ஒட்டுநர் விதைகள், பூச்சி மருந்துகள் பயன்படுத்துவதால் பெண்களுக்கு மறு உற்பத்தி வியாதிகள் தோற்றுவிக்கின்றன. வெள்ளைபடுதல், பெல்விக் வீக்கம் போன்றவை பெண்களிடையே பரவலாகக் காணப்படும் நோயாகும். சுற்றுச் சூழல் நச்சுமயமாவதால் பல பெண்கள் மார்பகப் புற்றுநோயால் அவதியுறுகின்றனர்.

புதிய பொருளாதாரக் கொள்கையின், பொருளாதார நெருக்கடியால் பெண்கள் குறைந்த அளவு உணவே உட்கொள்கின்றனர். (கடைசியில் உண்ணும்போது, உணவில்லாமல் பசியுடனும் படுத்துக் கொள்கின்றனர்) இதனால், பெண்கள் இரும்புச் சத்தின்றி சத்துக் குறைவால் பல நோய்களுக்கு இரையாகின்றனர்.

இவ்வாறு, ஏழை விவசாயத் தொழிலாளப் பெண்களின் வாழ்வை உலகமயமாக்கல் சூறையாடுவதை எதிர்த்திட வேண்டிய அவசியம் நம்முன் உள்ளது!

## பெண் வழக்கறிஞரின் பாலியல் வன்முறை - தற்கொலை

பெண்கள் ரோட்டில் போனால் கேலி, கிண்டல்கள்... பேருந்தில் பயணம் செய்தால் உரசல்கள், சீண்டல்கள்... அலுவலகப் பணிக்கு சென்றால் உயர் அதிகாரியின் பாலியல் கொடூரங்கள். . . எக்ஸ்போர்டு கம்பெனியில் மேற்பார்வையாளர்களின் பாலியல் வக்கிரங்கள்... கல்லூரிக்கு சென்றால் ஈவ் டீசிங். .. கிராமங்களில் பண்ணையார்களின் காமப் பசிக்கு இரையாகும் விவசாயப் பெண்கள். . . இப்படி பாலியல் வக்கிரங்கள் கிராமங்கள் முதல் நகரங்கள் வரை நாட்டின் மூலை முடுக்கெல்லாம் தினமும் நடக்கும் நிகழ்ச்சி!

இந்தக் கொடூரங்கள் பெண் வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், தொழில்நுட்பர்களையும் விட்டுவைக்கவில்லை. தன்நம்பிக்கையுடன், சுயசிந்தனையுடன் சமூக செயலில் தைரியமாக வழக்காடு மன்றத்தில் வாதாடும் பெண் வழக்கறிஞர்கள், சக ஆண் வழக்கறிஞர்களால் பாலியல் சீண்டல்களுக்கு இரையாவது சமீபத்தில் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

ஆந்திர உயர்நீதிமன்ற வழக்கறிஞர் சங்கீதா சர்யா, சக – மூத்த ஆண் வழக்கறிஞர்களால் பலமுறை பாலியல் கொடுமைகளுக்கு இரையாக்கப்பட்டுள்ளார். தன்னை பாலியல் கொடூரத்திற்கு இரையாக்கியவர்களை பட்டியலிட்டு பலமுறை பார்கவுன்சில் முதல் மனித உரிமைக் கழகம் வரை நீதிக்கேட்டு மன்றாடினார். ஆனால் சங்கீதாவிற்கு பார்கவுன்சில் மற்றும் மனித உரிமைக் கழகத்தின் கதவுகள் மூடப்பட்டன. தன்னை இந்தக் கொடூரத்திற்கு இரையாக்கிய நபர்கள் தண்டிக்கப்பட்டு, தனக்கு நீதிக் கிடைக்கும் ; நியாயம் கிடைக்கும் என்று நம்பி ஏமாந்துப் போன சங்கீதா, ஜூன் –15 அன்று தன்னுடைய உயிரை மாய்த்துக் கொண்டார்.



படிப்பகம்

www.padippakam.com

... செய்தித் துளிகள் ... ... செய்தித் துளிகள் ... ... செய்தித் துளிகள் ...

சங்கீதா இறந்தவுடன், பெண்கள் அமைப்புகளின், பெண் வழக்கறிஞர்களின் கொந்தளிப்பு, தேசிய மனித உரிமைக் கழகத்தின் கதவுகளை திறக்க வைத்தது. மனித உரிமைக் கழகத்தில் நீதிக் கிடைக்காமல் உயிர் நீத்த சங்கீதாவின் உயிர்போன பிறகு, சிறப்பு கூட்டம் கூட விசாரணையாம்! கேலிக் கூத்தாயில்லை!

தன் மீதான பாலியல் வக்கிரத்தை எதிர்த்து நீதிக் கேட்டு, நியாயம் கேட்டு மல்லாடி சலித்துப் போன சங்கீதா, இறந்தவுடன், ஆணாதிக்க வெறிப்பிடித்து அலையும் ஆணாதிக்க வெறியர்கள் சங்கீதா மனநிலை சரியில்லாமையினால் தான் தற்கொலை செய்துக் கொண்டார் என்றுக் கூறி அவர்களின் ஆதிக்கக் காம வெறியுடன் கும்மாளம் போடுகின்றனர். சங்கீதாவின் இறப்புக்கு பின், கற்பழிப்பு நிலையங்களாக மாறிவரும் காவல்துறை, (அ) நீதிமன்றங்கள், உயிரே போனபின் மனித உரிமையை பேணிக் காக்கும் தேசிய மனித உரிமை கழகம் பதற்றமாம்! விசாரணையாம்! இதெல்லாம், யாரை ஏமாற்ற?

இது ஏதோ, சங்கீதா மட்டும் அனுபவித்தக் கொடுமையல்ல! இந்த பிற்போக்கு ஆணாதிக்கச் சமூகத்தில் பெண்ணாக பிறக்கும் ஒவ்வொரு பெண்ணும் அனுபவிக்கும் கொடுமை தான்! பாலியல் கொடூரத்திற்காக உயிரைப் போக்கிக் கொள்ளக் கூடாது. மாறாக இதுபோன்ற ஆணாதிக்க சமூகக் கொடுமைகளை எதிர்த்து, பெண்கள், ஆதரவாயுள்ள ஆண்களுடன் ஒன்று சேர்ந்து குரல் கொடுத்து வீரமிக்கப் போராட்டங்கள் செய்வதால் மட்டுமே இது போன்ற கொடுமைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க முடியும். சங்கீதா போன்றோரின் இழப்பை தவிர்க்க முடியும்!

## ஒலிம்பிக் -பாலியல் பாகுபாடு தடை

30 வருடங்களுக்குப் பின் பாலியல் பாகுபாடு சோதனையை நிறுத்த ஒலிம்பிக் சங்கம் ஒப்புக் கொண்டது.

பல வருடங்களாக, பெண் தடகள வீராங்கனைகள் பாலியல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அப்படி பரிசோதனைக்கு ஆளாகும் போது பல அவமானங்களை சந்திக்க நேரிடுகிறது. ஆரம்பகாலத்தில் பெண் மருத்துவர்கள் முன்னால் ஆடையில்லாமல் வலம் வரவேண்டும் என நிர்பந்தித்தனர். பின்பு நேரடி (Cynoclogical) பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டனர். மற்றொரு கொடூர பரிசோதனை என்னவெனில், குரோமோசோம் பரிசோதனை. இப்பரிசோதனையில் பெண் தன்மை இருப்பினும் XXக்கு பதிலாக XY குரோமோசோம் இருந்தால், போட்டியில் பங்கு பெறும் வாய்ப்பை இழக்க வேண்டி இருக்கிறது

1950 – களில் நிறையப் பெண்கள் போட்டிகளில் பங்குக் கொள்ள ஆரம்பித்ததனால், ஆண் வீரர்கள் பெண்களைப் போல வேடம் அணிந்து போட்டிகளில் கலந்து கொள்வதாக வதந்திகள் பரவின. அதற்கு ஏற்றாற்போல், இரண்டாம் உலகப்



படிப்பகம்

www.padippakam.com

... செய்தித் துளிகள் ... ... செய்தித் துளிகள் ... ... செய்தித் துளிகள் ...

போருக்கு முன், தடகளப் போட்டியில் கலந்துக் கொண்டவர்களில்,. ஒரு பெண் வீராங்கனை இறக்கும் தருவாயில், அவர் பாலியல் மாற்றங்களை செய்துக் கொண்ட ஆண்! பெண் அல்ல என்று கண்டுபிடிக்கப்பட்டது. இக்காரணங்களைக் காட்டி அனைத்து பெண் வீராங்கணைகளும் வக்கிரமான பரிசோதனைக்கு ஆளாக்கப்பட்டனர். பரிசோதனைக்கு ஆளாகும் போது, பெண் தன்மை இல்லையெனில் போட்டியிலிருந்து அநியாயமாக வெளியேற்றப்படுகின்றனர்.

இந்தக் கொடுமையை அனைத்து மருத்துவ அமைப்புகளும் எதிர்த்தன. அமெரிக்க மருத்துவ சங்கம், குழந்தை மருத்துவத்துக்கான சங்கம், அமெரிக்க கல்லூரி, அமெரிக்க மனித மரபு சமுதாயம் என்று அனைத்து சங்கங்களும் எதிர்த்தன. எதிர்ப்புகள் அதிகமானதால் தான், இந்த பாலியல் பாகுபாடு சோதனையை நிறுத்துவதாக ஒலிம்பிக் சங்கம் ஒப்புக் கொண்டது.

தற்போது சிட்னியில் நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டிகளில் இப்பால் பாகுபாடு சோதனையை தற்காலிகமாக நிறுத்தி வைத்திருப்பதால், அதிகப் பெண்கள் கலந்துக் கொள்ளும் வாய்ப்புள்ளது.

(செய்தி – 'எகானமிகல் அண்டு பொலிடிகல் வீக்லி')

## 'திருமணமாகாத குழந்தைத் தாய்களின்' கொடூரம்

கேரளத்தில் பாலக்காடு மாவட்டத்தில் அட்டப்பாடியில் அரசு நடத்தும் 'அகலி மலை வாழ்ப் பெண்கள் விடுதியில்' திருமணமாகாத பெண் குழந்தைகள் தாயானது கேரளத்தையே அதிர வைத்துள்ளது. விசாரணையில் இரண்டு பெண் குழந்தைகள் கருக்கலைப்பு செய்துவிட்டதாகவும் தெரியவந்தது.

விடுதியிலுள்ளவர்களின் உதவியால், கடைசிக் காட்சி சினிமாப் பார்ப்பதற்கு இப்பெண்கள் அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு பாலியல் வியாபாரிகளுக்கு பெண் குழந்தைகள் விற்கப்பட்டனர். அரசியல் பெருச்சாளிகளின் தலையீட்டால் குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் உலாவருகின்றனர். அரசும் இக்கொடூரச் செயல்களைப் பற்றித் தெரிந்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஏதோ பெயருக்காக 'திருமணமாகாத தாய்களை' பற்றி விசாரணைக் குழு ஒன்றமைத்து கண்துடைத்தது.

இதுமட்டுமல்லாமல் இந்த அட்டப்பாடி பகுதியில் 18–25 வயதுள்ள பெண்கள் 360 பேர் இது போன்ற பாலியல் கொடூரத்திற்கு இரையாகியுள்ளனர் என்பது அதிர்ச்சி தரும் செய்தியாக உள்ளது. வெளியிலிருந்து மலைவாழ் மக்களிடம் வரும் வெறியர்கள், வேலையின்றி நிலமின்றி இருக்கும் இருளா மலைவாழ் பெண்களை பாலியல் கொடூரத்திற்கு இரையாக்கி விட்டு, அப்பகுதியை விட்டே காணாமல் போய்விடுகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com



இந்தக் கொடூரத்தைத் தாங்க இயலாமல் சில பெண்கள் விபச்சாரத்தில் ஈடுபடுகின்றனர். சிலர் போதைக்கு அடிமையாகின்றனர். சிலர் கொடுமைகளை தாங்க இயலாமல், மனநிலை சரியில்லாதவர்களாகிவிடுகின்றனர்.

25,000 மக்கள் தொகைக் கொண்ட அட்டப்படி மக்கள் வறுமை, பட்டினி, பல நோய்களுக்கு இரையாகின்றனர். பெண்கள் மனிதத்தன்மையற்ற பாலியல் சுரண்டலுக்கும் இரையாவதை கேரள அரசும், ஏனைய அரசுகளும், ஓட்டுவேட்டையாடும் அரசியல்வாதிகளும் தடுத்து நிறுத்தமாட்டார்கள் என்பதை உறுதியிட்டுக் கூறலாம். ஏனெனில், இவர்கள் தான் இந்தியப் பெண்களின் உடலை வெளிநாட்டவர் அனுபவிக்க 'பாலியல் சுற்றுலா' உபசரிப்பு தொழில்' என்று எண்ணற்ற கொடுமைகள் செய்ய இந்திய நாட்டை அகல திறந்துவிட்டவர்களாச்சே! இதுபோன்ற கொடுமைகள் இன்னமும் அதிகரிக்கப் போவதை தான் நம் அரசியல் – பொருளாதார – பண்பாட்டு – சமூக சூழல் எடுத்துரைக்கின்றது.

## தர்மபுரியில் - காவல்நிலையக் கற்பழிப்பு

தர்மபுரியில் ஒசூர் பகுதியில் பஸ் நிலையத்தில் நின்று கொண்டிருந்த நாகா (என்ற) நாகமணியை சேகர், ரவிச்சந்திரன் என்ற காவல்துறைக் காமவெறிக் கயவர்கள் பலவந்தமாக அஞ்செட்டி காவல்நிலையத்திற்குள் இழுத்து சென்று பாலியல் வன்முறைக்கு இரையாக்கியுள்ளனர்.

இக்கொடுமை காட்டுத் தீ போல், ஒசூர் பகுதி முழுக்கப் பரவியதால், கிராம மக்கள் அஞ்செட்டி காவல்நிலையத்தைத் தகர்த்தெறிந்தனர். மக்களின் கொந்தளிப்பால், இன்னமும் தங்களுக்கு சேதம் வந்துவிடும் என்று பதறிப்போன காவல்துறை உயர் அதிகாரி, இச்சம்பவம் காவல் நிலையத்தில் நடக்கவில்லை, காவலர் வீட்டில் தான் நடந்தது என்று "முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைத்தது போல்" உண்மையை மறைத்தார். சேகர், ரவிச்சந்திரன் மற்றும் காவல்துறை ஆய்வாளரை பெயருக்காக தற்காலிக பதவி நீக்கம் செய்து, விசயத்தை மூடிமறைத்தனர்.

தமிழகத்தில் காவல்நிலையங்கள் கற்பழிப்புக் கூடங்களாக மாறிவருவதை மக்களின் போர்குணங்களால் தடுத்து நிறுத்துவோம்!

---

சிங்காரச் சென்னை
2000–நவீன வீதி உலா
தண்ணீர் லாரிகள் – பொன்னி



படிப்பகம்

www.padippakam.com

# எதிரொலிப்பு

(நண்பர்களே! இன்றைய பிற்போக்கு சீரழிவு சமூகத்தில் பெண்ணாகப் பிறக்கும் ஒவ்வொருவரும் பல பிரச்சனைகளை எதிர்கொள்வது என்பது தினசரி நிகழ்ச்சியாகிவிட்டது! தாங்கள் சந்தித்தப் பிரச்சனைகளை மற்றவர்களிடம் பகிர்ந்துக் கொள்ள வேண்டும் என்று பலமுறை நினைத்திருக்கலாம். ஆனால், பல சமயங்கள், பகிர்ந்துக் கொள்வதற்கான வாய்ப்புகள் கிடைக்காமல், மனதிற்குள்ளே புழுங்கிக் கொண்டு அவதிப்பட வேண்டியிருக்கும். ஆனால், தாங்கள் எதிர்கொண்டப் பிரச்சனைகளையும், அதை தீர்க்க மேற்கொண்ட வழிகளையும் பகிர்ந்துக் கொள்ளும் காலம் தான் 'எதிரொலிப்பு' காலம்! உங்களுக்கான இந்தக் காலத்தில், தான் எதிர்கொண்ட பிரச்சனையை கவிதையாக எழுதியனுப்பியுள்ளதை பிரசுரிக்கிறோம்.)

– ஆசிரியர் குழு

## என்னை பாதித்த சம்பவம்

வேண்டும் மட்டும் பட்டு விட்டோம்
வேதனை ஒன்றும் தீரவில்லை - எங்கள்
விடியல் என்றோ புரியவில்லை
துன்பத்துக் கொன்றும் பஞ்சமில்லை

பெண்ணென்றால் பேயும் இறங்குமாம்
சொன்னவர் யாரோ புரியாதவர் போலும்
இந்த உலகத்தின் நிலையை அறியாதவர் போலும்
இந்த உலகத்தின் நிலையை அறியாதவர் போலும்

ஆராய்ந்து பார்க்கிறேன் வேதனை வந்தது
உலகத்தின் போக்கில் நெஞ்சு ரணமாய் நின்றது
வெறும் போகப் பொருளாய் பார்க்கும் பார்வை
வேண்டாம் இனி மானிடா

மனம் இல்லா மரப்பாச்சியா நாங்கள்
உணர்வுள்ள உயிர் ஜீவன்கள்
பாடிப் போனான் பாரதி அன்று



படிப்பகம்

www.padippakam.com

புதுமைப் பெண்ணாய் வாழ் நீ என்று
இன்று அவன் இருந்திருந்தால் - பெண்ணெனும்
ஈனப்பிறவி வேண்டாம் என்பான்
எங்கள் நிலை கண்டிறங்கி
ஆறறிவு நமக்கெதற்கு
ஆராய்ந்து அறியத்தானே
ஆராய்ந்து அறியத்தானே
ஆண்மை என்பது என்ன
அன்பால் அரவணைப்பது தானே
ஒன்று மட்டும் சொல்கிறேன்
ஓயாது எங்கள் குரல் - பெண்
உண்மையாய் போற்றப்படும் நாள்வரை

— அருள்மொழி

---

## பாகிஸ்தான் : பெண்களை கொல்லும் 'குடும்பக் கௌரவம்'

சமீப சில ஆண்டுகளாக, பாகிஸ்தானில் குடும்ப கௌரவத்தை காத்தல் (!?) என்ற பெயரில் ஆயிரக்கணக்கான பெண்கள் கொடூரமாக கொல்லப்படுகின்றனர். ஒரு பெண் ஒரு ஆணை காதலித்தாலோ விவாகரத்து கோரினாலோ அப்பெண்ணை 'கள்ள உறவு(!?) கொண்டவள்' என்று பொய்யாகக் குற்றஞ்சாட்டி அவள் கொலை செய்யப்படுகிறாள்.

பாகிஸ்தானின் மனித உரிமை ஆணையத்தின் கூற்றுப்படி, சென்ற ஆண்டு மட்டும் ஏறத்தாழ 1,000 பெண்கள் இவ்வாறு 'குடும்ப கௌரவத்திற்காக கொல்லப்பட்டுள்ளனர். நாட்டில் உள்ள பிராந்திய **செய்தித்தாள்களின் கூற்றுப்படி, நாள்தோறும் இத்தகைய கொலைகள் ஐந்து நடக்கின்றன.** இன்னும் பல வெளியுலகிற்கு தெரிய வராமலேயே நடக்கின்றன.

சென்ற ஏப்ரலில், 24 வயதான சமியா சர்வார் என்ற பெண் விவாகரத்து பெற ஒரு வழக்கறிஞரின் அலுவலகத்திற்கு சென்றபோது அங்கேயே அவள் சுட்டுக் கொல்லப்பட்டாள். குடும்ப மானத்தை கேலிக்குரியதாக்கிவிட்டாள் என்று அவளை கொன்றதற்கு காரணம் கூறப்பட்டது.

இத்தகைய கொலைகளை செய்வது குடும்பங்களிலுள்ள அப்பா, சகோதரன், கணவன் போன்றோரே. இக்கொலைகளில் பல போலீசுக்கு தெரியவந்தால் இலஞ்சம்



படிப்பகம்

www.padippakam.com

கொடுத்தோ சமாதானம் செய்தோ 'குடும்ப விபத்துகள்' என்ற பெயரில் அப்புகார்கள் தள்ளுபடி செய்யப்பட்டுவிடுகின்றன. இன்னும் பல சட்டத்தில் உள்ள ஓட்டைகளை பயன்படுத்தி நியாயப்படுத்தப்படுகின்றன.

அதாவது, பாகிஸ்தானின் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 32 ஆம் பிரிவு என்ன கூறுகிறதென்றால், மிக மோசமான திடீரென்று தூண்டிவிடப்படும் உணர்வால் நடைபெறும் கொலைக்கு, மரண தண்டனை கொடுக்கலாகாது. இப்பிரிவைப் பயன்படுத்தி கொலையாளிகள் கொலையை ஒப்புக்கொள்வதோடு தப்பித்தும் விடுகின்றனர்.



இவ்வாறு கொல்லப்படும் பெண்களின் உடல்கள் ஆற்றோரங்களில் வீசப்படுகின்றன. (அ) கள்ள உறவு கொண்டிருந்தவர்களுக்கான இடுகாட்டில் (?) புதைக்கப்படுகின்றன.

ஒரு பெண் காதலித்தாலே அதை கள்ள உறவு என்று சித்தரித்து அவளை கொல்லும் பாகிஸ்தானின் நிலவுடமைச் சமூகம், அச்செயலை ஆண் செய்தால் சம்பந்தப்பட்ட பெண்ணின் குடும்பத்திற்கு பணம் கொடுத்து தப்பித்துவிட அனுமதிக்கிறது.

மேலும், விஸாஸ் (VISAS) மற்றும் தியாத் (DIXAT)போன்ற இஸ்லாமிய மதச் சட்ட கருத்தாக்கங்களின்படி, கொல்லப்பட்ட பெண்ணின் இரத்த உறவினர் ஒருவர், அப்பெண்ணின் பாதிக்கப்பட்ட அங்கங்களுக்கு ஏற்ப உரிய பணத்தை பெற்றுக் கொண்டு முறையாக (!) மன்னிக்கலாம். இவ்வாறு, குடும்பம், மதம் போலீஸ் சட்டம் என பல வழிகளில் ஒடுக்கப்படும் இத்தகைய பெண்கள் உயிர் தப்பிக்க வழியே இல்லை.



6, ஏப்ரல் 1999 விவாகரத்துக் கேட்டதனால் கொல்லப்பட்ட சபியா சர்வர்

ஒரு வேளை, சம்பந்தப்பட்ட பெண் நிலப்பிரபுவிடமோ மதவாதியிடமோ தஞ்சமடைந்தால் உயிர் தப்பிக்கலாம் ; ஆனால், அங்கும் அக்கொடூரங்களின் பாலியல் பலாத்காரத்திலிருந்தும் அவர்களுக்கு அடிமையாக வேலை செய்வதிலிருந்தும் தப்பிக்க இயலாது. இன்றைக்கு பாகிஸ்தானின் பெண்கள் தங்களின் உரிமைகளுக்காக முன்னெப்போதும் விட தீவிரமாக போராடி வருகின்றனர். அதைப் பொறுத்துக்கொள்ளாத நிலப்பிரபுக்கள், மதவாதிகள் போன்ற நிலவுடமைச் சக்திகளும் ஆணாதிக்க வெறியர்களும் இத்தகைய கொடூரச் செயல்களில் ஈடுபடுகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

பாகிஸ்தானின் நிலவுடமைச் சக்திகள், தங்களின் வர்க்க நலன்களுக்காக தாங்கள் கட்டிக் காக்கும் நிலவுடமைச் சமூகத்திற்கு பங்கம் வராதவாறு, பெனாசிர் போன்ற பெண்களை பிரதமராக்கவும் (அதுவும் கூட, அவரின் தந்தை பூட்டோ பிரதமராக இருந்தார் என்ற நிலவுடமை கருத்தாக்கத்தினால் மட்டுமே) பாகிஸ்தானின் மனித உரிமை ஆணையத்தின் தலைவராக பெண்களை நியமிக்கவும் அனுமதிக்கும். ஆனால், அதற்கு மேல் எதையும் அனுமதிக்காது.

பாகிஸ்தானின் நீதிமன்றத்தில் 2 பெண்கள் சாட்சியமளித்தால்தான் ஒரு சாட்சிக்கு சமமாக கருதப்படும். கடந்த ஏப்ரல் மாதத்தில், நாட்டின் தலைநகர் இஸ்லாமாபாதில் நடைபெற்ற மனித உரிமை மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய நாட்டின் இராணுவ சர்வாதிகாரி முஜாரஃப், "குடும்ப கௌரவத்தின் பெயரால் நடைபெறும். கொலைகள், கொலைகளாகவே கருதப்படும் என்று அறிவித்தார். ஆனால், இஸ்லாமிய மதவாதிகள் கொடுத்த நெருக்கடியினால், மிக விரைவிலேயே அதைத் திரும்பப் பெற்றார்.

பாகிஸ்தானின் பெண்கள் தங்களின் உரிமைகளை அடைய வழி – பெண்களை சமமாக மதிக்கும் சமூகத்தைப் படைப்பதே. அதற்கு,, இஸ்லாமிய மத கோட்பாடுகளை எதிர்ப்பதும் அவற்றை கட்டிக் காக்கும் நிலவுடமைச் சக்திகளை முறியடிப்பதே தீர்வு.

– மகேஷ்

# ஈவ்டீசிங் கொடுமைக்கு இரையான மற்றொரு சரிகாஷா

கருணாநிதி அரசு சரிகாஷா இறந்தவுடன் ஈவ்டிசிங் தடுப்பு சட்டத்தை கொண்டு வந்து ஈவ்டீசிங்கால் பெண்களின் உயிர் பறிபோவதை நிறுத்தப் போவதாக வீரவசனங்களை பேசியது. காவல்துறையும், இரயில் நிலையம் முதல் கல்லூரி வாசல்கள் வரை ஈவ்டீசிங் புகார் பெட்டி ஒன்றை வைத்து ஈவ்டீசிங் பற்றிய புகார்களை (உயிரே போன பிறகு) சேகரிக்கிறதாம்! பேருந்துகளில் பெண் போலீஸ் ஈவ்டீசிங் செய்பவர்களை கண்டுபிடித்து தண்டனை கொடுப்பதான போலியாட்டங்கள் வேறு சில நாட்களுக்கு! கண்துடைப்புக்கான இந்த நாடகங்களை தினமும் நடைபாதைகளில், கல்லூரிகளில், பேருந்துகளில் நடக்கும் சம்பவங்கள் நமக்கு வெளிச்சம்போட்டு காட்டுகின்றன. இதற்கு ஒரு எடுத்துக்காட்டாய்! இதோ! சமீபத்தில் காஞ்சிபுரத்தில், கிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவி தீபாவின் மரணம்!

முதலாமாண்டு பி.எஸ்.சி மைக்ரோ பயாலஜி படிக்கும் தீபாவை கல்லூரியின் மூத்த மாணவர்கள் கிண்டல் செய்தும், பாட்டு பாடவில்லையெனில் தொலைத்துவிடுவோம் என்றுக் கூறி மிரட்டியதனால், தன் உயிரை மாய்த்துக் கொண்டார் தீபா!



படிப்பகம்

www.padippakam.com

சினிமா, டி.வி.யில் மேலைநாட்டு ஆபாச பண்பாட்டை எரிகிற நெருப்பில் நெய்யை ஊற்றுவதுபோல் அதிவேகமாக வளர்த்துவிட்டு இளைஞர்கள் மனதில் காம இச்சையை ஊட்டி வளர்த்துக் கொண்டே, ஈவ் டீசிங் தடுப்பு சட்டத்தால், ஈவ்டீசிங்கை தடுத்து நிறுத்தி பெண்களின் உயிரை காப்பாற்றுவோம் என்று கூறுவதெல்லாம், கற்பனையான சினிமா வசனங்கள் தான்! தீபா போன்ற எண்ணற்ற மாணவிகளின் உயிர் பறிபோவதை தடுக்க வேண்டுமெனில், ஈவ்டீசிங் கொடுமைக்கு காரணமான மேலைநாட்டு ஆபாச பண்பாட்டை ஒழிக்க போராட்டப் பாதையில் அணிதிரள்வது தான் ஒரே வழி!

– ஸ்வரூபா

# பொன்னகரம்

பொன்னகரத்தைப் பற்றிக் கேட்டிருக்கிறீர்களா? நமது பௌராணிகர்களின் கனவைப் போல அங்கு ஒன்றுமில்லை. பூர்வ புண்ணியம் என்று சொல்லுகிறார்களே, அந்தத் தத்துவத்தைக்கொண்டு நியாயம் என்று சமாதானப் படவேண்டிய விதிதான். ஒரு சில 'மகாராஜா' களுக்காக, இம்மையில் பயனைத்தேடிக் கொடுக்கக் கடமைப்பட்டு வசிக்கும் மனிதத் தேனீக்களுக்கு, உண்மையில் ஒரு பொன்னகரந்தான் அது.

ரயில்வேத் தண்டவாளத்தின் பக்கமாக, சாராய டிப்போவுக்குப் போகிறதே ஒரு சந்து, அதுதான் அங்கு 'மெயின்' ரஸ்தா. கைகோத்த நான்கு பேர் வரிசை தாராளமாகப் போகலாம். எதிரே வண்டிகள் வராவிட்டால். இதற்குக் கிளையாக உள்வளைவுகள் உண்டு. முயல்வளைவுகள் போல.

இந்தத் திவ்வியப் பிரதேசத்தைத் தரிசிக்கவேண்டுமானால், சிறு தூறலாக மழை சிணுசிணுத்துக் கொண்டிருக்கும்பொழுது சென்றால் தான் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். வழி நெடுகச் சேற்றுக் குழம்புகள். சாலையோரமாக முனிசிபல் கங்கை –அல்ல ; யமுனை தானே கறுப்பாக இருக்கும்? அதுதான். பிறகு ஓர் இரும்பு வேலி ; அதற்குச் சற்று உயரத் தள்ளி அந்த ரயில்வேத் தண்டவாளம்.

மறுபக்கம், வரிசையாக மனிதக் – கூடுகள் – ஆமாம், வசிப்பதற்குத்தான்.

தண்ணீர்க் குழாய்கள்? இருக்கின்றன. மின்சார விளக்கு? ஞாபகமில்லை – சாதாரண எண்ணெய் விளக்கு. அதாவது சந்திரன் இல்லாத காலங்களில் (கிருஷ்ண பட்சத்தில்) ஏற்றிவைத்தால் போதாதா?

பொன்னகரத்துக் குழந்தைகளுக்கு 'மீன் பிடித்து' விளையாடுவதில் வெகு பிரியம். அந்த முனிசிபல் தீர்த்தத்தில், மீன் ஏது? எங்கிருந்த பணக்கார வீடுகளிலிருந்தோ, சில சமயம் அழுகிய பழம், ஊசிய வடை, இத்தியாதி உருண்டு வரும். அது அந்த ஊர்க் குழந்தைகளின் ரகசியம்.



படிப்பகம்

www.padippakam.com

ரயில்வேத் தண்டவாளத்தின் பக்கத்தில் விளையாடுவதில் என்ன ஆனந்தமோ? வேலி இருக்கத்தான் செய்கிறது. போகக்கூடாது என்ற சட்டம் குழந்தைகளுக்குத் தெரியுமா? 'போனால்' பெற்றோருக்குத்தான் கொஞ்சம் பாரம் ஒழிந்ததே! குழந்தைகள் தான் என்ன 'கிளாஸ்கோ', 'மெல்லின்ஸ்பூட்' குழந்தைகளா, கம்பி இடையில் போகமுடியாமலிருக்க? புகைந்தோடும் அந்த இரும்பு நாகரிகத்திற்கு, வரிசையாக நின்று "குட்மார்னிங் சார்!" என்று கத்துவதில் ரொம்ப ஆனந்தம் அவர்களுக்கு. அதுதான் அவர்களுக்குக் கிடைக்கும் ஆரம்ப ஆங்கிலக் கல்வி.

ஐந்து மணிக்கு அப்புறந்தான் ஊர் கலகலவென்று உயிர்பெற்று இருக்கும். அப்பொழுதிருந்து அவ்வூர்ப் பெண்கள் தங்கள் வேலையைச் செய்வார்கள். சாராய வண்டிகள், தண்ணீர் எடுக்க வரும் பெண்கள்! அங்கு தண்ணீர் எடுப்பது என்றால் ஒரு பாரதப் போர்.

இளவயதில் நரைத்ததுபோல் பஞ்சு படிந்த தலை. மாசடைந்த கண்கள் – விடிய விடிய மின்சார 'ஸ்பின்டிலை'ப் (கதிர்) பார்த்துக் கொண்டு இருந்தால், பிறகு கண் என்னமாக இருக்கும்? கண்கள்தாம் என்ன இரும்பா? உழைப்பின் ஆரோக்கியத்தால் ஏற்பட்ட கட்டமைந்த அழகு. ஆரோக்கியமா? அது எங்கிருந்து வந்தது? பாக்டீரியா, விஷக் கிரிமிகள், காலரா இத்தியாதி அங்கிருந்துதானே உற்பத்தி செய்யப்படுகின்றன! எப்படியாவது உயிர்வாழ வேண்டும் என்று ஆசையிருந்தால் எல்லாம் நடக்கும். பழைய கற்காலத்து மனிதன், புலி சிங்கங்களுடன் குகையில் வாழ்ந்து வந்தான் ; அவைகளும் அவனைக் கொன்றன ; அவனும், அவைகளைக் கொன்றான். அதற்காக வலிமை அற்று, வம்சத்தை விருத்தி செய்யாமல் செத்தொழிந்தா போனான்? வாழ்க்கையே ஒரு பெரிய வேட்டை. அதற்கென்ன?

கழுத்தில் ஒரு கறுப்புக் கயிறு – வாழ்க்கைத் தொழுவின் அறிகுறி. அதைப்பற்றி அங்கு அதிகக் கவலை இல்லை. அது வேறு உலகம், ஐயா, அதன் தர்மங்களும் வேறு.

அம்மாளு ஒரு மில் கூலி. வயது இருபது அல்லது இருபத்திரண்டிற்குமேல் போகாது. புருஷன் 'ஜட்கா' வைத்திருக்கிறான். சொந்த வண்டிதான். அம்மாளு–முருகேசன் (அவள் புருஷன்), அவன் தாயார், தம்பி, முருகேசன் குதிரை – ஆக நபர் ஐந்து சேர்ந்து அவர்கள் குடும்பம். இருவருடைய வரும்படியில்தான், இவர்கள் சாப்பாடு – (குதிரை உட்பட). வீட்டு வாடகை, போலீஸ் 'மாமுல்', முருகேசன் தம்பி திருட்டுத்தனமாகக் கஞ்சா அடிக்கக் காசு – எல்லாம் இதற்குள்தான். எல்லோரும் ஏகதேசக் குடியர்கள்தான். 'டல் ஸீசனில்' பசியை மறக்க வேறு வழி? பசி! ஏயா, பசி! "பத்தும் பசி வந்திடப் பறந்து போம்' என்று வெகு ஒய்யாரமாக, உடம்பில் பிடிக்காமல் பாடுகிறீரே! அங்கு நீர் ஒருநாள் இருந்தால், உமக்கு அடிவயிற்றிலிருந்து வரும் அதன் அர்த்தம்!



படிப்பகம்

www.padippakam.com

அன்றைக்கு முருகேசனுக்குக் குஷி. அவனும், அவன் குதிரையும் 'தண்ணி' போட்டுவிட்டு ரேஸ் விட்டார்கள். வண்டி 'டோக்கர்' அடித்தது. ஏர்க்கால் ஒடிந்தது. குதிரைக்குப் பலமான காயம். முருகேசனுக்கு ஊமையடி. வீட்டில் கொண்டுவந்து போடும் பொழுது பேச்சுமூச்சில்லை. நல்லகாலம் குடித்திருந்தான், இந்த மாதிரி வலிதெரியாமலாவது கிடக்க. வீக்கத்திற்கு என்னத்தையோ அரைத்துப் பூசினாள் அம்மாளு. அப்பொழுதுதான் சற்றுப் பேசினான். அவனுக்குப் பால் – கஞ்சி வேண்டுமாம்! அம்மாளுக்குக் கூலி போட இன்னும் இரண்டு நாள் இருக்கிறது. வீட்டில் காசேது?

அம்மாளு தண்ணீர் எடுக்க வருகிறாள்.

'கும்' மிருட்டு, பஞ்சாங்கத்தின்படி இன்றைக்குச் சந்திரன் வரவேண்டும், ஆனால் அது மேகத்தில் மறைந்து கொண்டால், முனுசிபாலிடி என்ன செய்ய முடியும்?

எப்பொழுதும்போல் இரைச்சல்தான். ஒருவாறு தண்ணீர் பிடித்தாய்விட்டது. திரும்பி வருகிறாள்.

சந்திரன் பக்கத்தில் ஒருவன் – அம்மாளுவின்மேல் ரொம்ப நாளாகக் 'கண்' வைத்திருந்தவன்.

இருவரும் இருளில் மறைகிறார்கள். அம்மாளும் முக்கால் ரூபாய் சம்பாதித்துவிட்டாள். ஆம். புருஷனுக்குப் பால் – கஞ்சி வார்க்கத்தான்!

என்னமோ கற்பு, கற்பு என்று கதைக்கிறீர்களே! இதுதான் ஐயா, பொன்னகரம்!

– புதுமைப்பித்தன்

---

## பெண்ணின் அகோரம் !

மார்கழி நோன்பிருந்தாள்
கண்ணன் போல் கணவன்
கட்டாயம் வருவான் என்று
சோதிடர் சொல் கேட்டு
நோன்பிருந்து நோன்பிருந்து
முன்நெற்றி நரையாச்சி
கண்ணன் வரக்காணோம்.
சோதிடர் வந்தார்
தனக்கு இரண்டாம்தாரம்
பெண் கேட்டு!

– முகிலன்



படிப்பகம்

www.padippakam.com

# சந்திரபாபு நாயுடுவின் கொலைவெறித் தாக்குதலை எதிர்த்திடுவோம்!



*அமெரிக்க ஏகாதிபத்தியவாதி கிளிண்டனுக்கு ரத்தின கம்பளி விரித்து ஹைதராபாத் நகரத்தை "ஹைடெக்" நகரமாக்கிய ஆந்திர சந்திர பாபு நாயுடு அரசு, உலக வங்கியின் கட்டளைப் படி மின்சார வரியை உயர்த்தியது. இதை எதிர்த்து எதிர்க்கட்சிகள் சட்டசபைக்குள் ஆர்ப்பாட்டம், உண்ணா விரதம் என்று போராட்டம் செய்து வந்தனர். 28-8-2000 அன்று சட்டசபை முற்றுகை போராட்டம் செய்த போது, போர்க்களத்தில் இருந்த மக்கள் மீது தடியடி, கண்ணீர்புகை பிரயோகித்தது மட்டுமல்லாமல், எந்த அறிவிப்பும் இன்றி துப்பாக்கி சூடு நடத்தி ஐ.எம்.எப், உலக வங்கிக்கு தன்னுடைய விசுவாசத்தைக் காட்டியது, சந்திரபாபு நாயுடு அரசு! இந்த துப்பாக்கி சூட்டிற்கு மூன்று பேர் பலிகடாக்கப்பட்டு உயிர் மாய்ந்தனர். பாசிசத்தை நிறுவத்துடிக்கும் ஆந்திர அரசில் இந்த கொடூர மக்கள் விரோதப் போக்கை த.பெ.க. வன்மையாகக் கண்டிக்கிறது.*

*- மாநிலக் குழு, த.பெ.க.*

---

**அன்பார்ந்த நண்பர்களே!**

**'பெண் உரிமை' யைப் படியுங்கள்**
**உங்கள் நண்பர்களுக்கு**
**அறிமுகப்படுத்துங்கள்;**
**விமர்சனங்களையும்,**
**படைப்புகளையும்**
**தவறாமல் அனுப்புங்கள்.**

**- ஆசிரியர் குழு**



படிப்பகம்

www.padippakam.com

## குடியைக் கெடுக்கும் குடியை ஒழித்திடுவோம்

கருங்கலில் களையெடுக்க
போன என் ஆத்தா. . .
பொழுது சாய வீடு வரும்.

எட்டாம் வகுப்பு -நான்
சத்துணவுச் சோறு தின்னுட்டு
சாயுங்காலம் வருவேன்.

ஆலமரத்தடி கருப்பையா கடையில
கடன் வச்சி கள்ளு குடிச்சிட்டு
இருட்டினதும் தள்ளாடி அப்பன் வரும்

அது மீச பாத்து - என்
அடிவயிறும் கலங்கும்
அதுகை அறுவா மாதிரி
கூலிப் பணங்கேட்டு
ஆத்தாவ இழுத்தடிக்கும்
உடம்பு முச்சூட
வீக்கம் கொப்புளிக்கும்

பயந்து சுருண்டு
படுக்க நான் போகையில
சட்டியில் கேப்பக் கூழ
உப்புப் போட்டு
'ஏலபுள்ள
கஞ்சி குடிச்சித் தூங்குன்னு'
வெரசா கரைக்கும்

களைபுடுங்கி
கையெல்லாம்
கொப்புளமும் காய்ப்பும்

அப்பன் அடிச்சாலும்
கை கொப்புளம் போட்டாலும்
கண்ணுல தண்ணி மறச்சி
என்னிய தொட்டு
ஆசையா தடவுறதுல - உன்
வலியெல்லாம் பறந்துறுமா

எனக்குத் தெரியும் ஆத்தா
வலியெல்லாம் ஒளிச்சு வச்சு
உம் மனசுல வடுவாகி நிக்கிறது.

வயக் காட்டுக் களையெடுக்க
போற என் ஆத்தா
உன் வாழ்க்கைக் களையெடுக்க
தெரியலயா. . .
முடியலயா . . .

- பொன்னி



படிப்பகம்